இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீட்டு எண் *1537/2016*

ஆர். ஜானகியம்மாள் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

எஸ்.கே. குமாரசாமி *(மரணமடைந்துவிட்டார்)*
சட்ட வாரிசுகள் மூலமாக மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண் *1538/2016*

எஸ்.ஆர். சோமசுந்தரம் மற்றும் ஒருவர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

எஸ்.கே. குமாரசாமி *(மரணமடைந்துவிட்டார்)*
சட்ட வாரிசுகள் மூலமாக மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்:

மேல்முறையீட்டாளர்களால் முறையே தாக்கல் செய்யப்பட்ட மே.வ. எண் *281/2000* மற்றும் மே.வ. எண் *332/1999* ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து, மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் கூட்டமர்வினால் வழங்கப்பட்ட *23.11.2011* தேதியிடப்பட்ட தீர்ப்புரைக்கெதிராக இவ்விரண்டு மேல்முறையீடுகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தரப்பினர்கள், மு.வ. எண் *1101/1987* *(எஸ்.ஆர். சோமசுந்தரம் -எதிர்- எஸ்.கே. குமாரசாமி)* என்ற வழக்கில் விவரிக்கப்பட்டுள்ளவாறு குறிப்பிடப்படவேண்டும். உ.மே. எண் *1537/2016*-இன் மேல்முறையீட்டாளர் ஆர். ஜானகியம்மாள்,

மு.வ. எண் 1101/1987-இல் 7-ஆம் மறுப்பாளராவார்; உ.மே. எண் 1538/2016-இன் மேல்முறையீட்டாளர் எஸ்.ஆர். சோமசுந்தரம், மு.வ. எண் 1101/1987-இல் வழக்காளராவார். ஆர். ஜானகியம்மாள், எஸ்.ஆர். சோமசுந்தரத்தின் தாயாராவார். இவ்விரண்டு மேல்முறையீடுகளை முடிவுசெய்வதற்குத் தேவையான தொடர்புடைய பொருண்மைகள் மற்றும் நிகழ்வுகளாவன:

2. தரப்பினர்கள், தமிழ்நாடு கோயம்புத்தூர் பட்டினத்திலிருந்து வந்தனர். அவர்களுடைய மரபுவழி அட்டவணையானது கீழ்க்காணுமாறு தரப்படுகிறது:



3. இவ்விரு மேல்முறையீடுகளின் மேல்முறையீட்டாளர்களான எஸ்.ஆர். சோமசுந்தரம் மற்றும் அவருடைய தாயார் ஆர். ஜானகியம்மாள் ஆகியோர் ரங்கசாமி கவுண்டரின் வாரிசுகளாவர். வேறு இரு பிரிவினரான 1-ஆம் மறுப்பாளர் எஸ்.கே. குமாரசாமி மற்றும் 4-ஆம் மறுப்பாளரான எஸ்.கே. சின்னசாமி ஆகியோர் மூன்று சகோதரர்களுடனும் மற்றும் ஒரு தந்தையார் எ.வி. கந்தசாமி கவுண்டருடனும், கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் தாலுகா, கருமத்தம்பட்டி கிராமம், சதபாளையம் குக்கிராமத்தில் தம்முடைய மூதாதையர் வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தனர். 27.9.1953 அன்று எ.வி. கந்தசாமி கவுண்டர் (மரணமடைந்துவிட்டார்), அவருடைய இளம் மனைவி பொன்னம்மாள், முதல் மனைவி, முதல் மனைவியின் மகன் சென்னியமலை மற்றும் கந்தசாமியின் 2-ஆம் மனைவியின் மகன்கள் ரங்கசாமி, எஸ்.கே. குமாரசாமி மற்றும் எஸ்.கே. சின்னசாமி ஆகியோர்களுக்கிடையிலான பாகப்பிரிவினையின் மூலம் கந்தசாமி மற்றும் பலர் 86 ஏக்கர் 72 சென்ட் நிலத்தைப் பெற்றனர்.

4. இவ்விரு மேல்முறையீடுகளும், மூன்று வகையறாக்களான ரங்கசாமி, குமாரசாமி மற்றும் சின்னசாமி ஆகிய சகோதரர்கள் தொடர்பானவையாகும். 1954 மற்றும் 1955-ஆம் ஆண்டுகளில், அவர்கள் பல்வேறு சொத்துகளை வாங்கி, லக்ஷ்மி அரிசி ஆலை வணிகம், 1976-ஆம் ஆண்டில் சுவாமி துணிக்கடை, தீப்பெட்டி தொழிற்சாலை, ஸ்லேட் தொழிற்சாலை, மரம் அறுப்பு தொழிற்சாலைகள், மரக்கடை வணிகம் மற்றும் மின் தறி ஆகியவற்றை கூட்டுக் குடும்ப நிதிகளிலிருந்து நடத்தி வந்தனர். 7.11.1960 அன்று மூன்று சகோதரர்களால் வாங்கப்பட்ட சொத்துகளுடன் 27.9.1953 தேதியிடப்பட்ட பதியப்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகள் தொடர்பாக அவர்களுக்கிடையே $^{1}/_{3}$ அளவிற்கு பதியப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டது. பாகப்பிரிவினைக்குப் பின்னரும், அதே

கூரையின் கீழ் மூன்று சகோதரர்களும் தொடர்ந்து வசித்து, கூட்டாளிகளாக வணிகம் செய்தனர். 1963-ஆம் ஆண்டு மூன்று சகோதரர்களும் 16.10.1963 தேதியிடப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் கருமத்தம்பட்டி, சோமனூர் கிராமத்தில் வீட்டு மனை வாங்கி, அதில் வீடு கட்டி, 1964-ஆம் ஆண்டு முதல், மூன்று சகோதரர்களும் அதில் குடியேறி வசிக்கத் துவங்கி, பல்வேறு கூட்டு வணிகங்களைச் செய்து வந்தனர். 27.5.1967 அன்று ரங்கசாமி கவுண்டர், தன்னுடைய மனைவி ஜானகியம்மாள், இரு மகன்கள் எஸ்.ஆர். சோமசுந்தரம், எஸ்.ஆர். சண்முகவேலாயுதம் மற்றும் ஒரு மகள் எஸ். சரஸ்வதி ஆகியோரை விட்டுவிட்டு, சாலை விபத்தில் மரணமடைந்தார். 1968 முதல் 1978 வரையில் மூன்று பிரிவுகளின் பெயரில் பல்வேறு சொத்துகள் வாங்கப்பட்டன. அக்குடும்பமுங்கூட, 1972-ஆம் ஆண்டில் உறவு பீல்ட் எஸ்டேட் என்ற தேயிலை எஸ்டேட்டை மறுப்பாளர்கள் 1, 4, 10 மற்றும் வழக்காளர் ஆகியோர்களின் பெயரில் வாங்கியது. சுவாமி அண்டு சுவாமி பிளாண்டேஷன் (பி) லிமிடெட் என்ற தனியார் நிறுமமுங்கூட, குடும்ப உறுப்பினர்களை மேம்படுத்துநர்களாகவும் மற்றும் இயக்குநர்களாகவும் கொண்டு வாங்கப்பட்டது.

5. 1975-ஆம் ஆண்டில், மறுப்பாளர்கள் 1, 4, 10 மற்றும் வழக்காளர் ஆகியோரின் பெயர்களில், வேதப்பட்டி கிராமத்தில் 50 ஏக்கர் நிலங்கள் வாங்கப்பட்டன. 1978-ஆம் ஆண்டில், கோயம்புத்தூர் தடாபத்தில் ஒரு மாளிகை பங்களா வாங்கப்பட்டது. இந்திய இராணுவத்தில் படைப்பிரிவுத் தலைவராக இருந்த 10-ஆம் மறுப்பாளர், தன்னுடைய பணியை விடுத்தபின்னர், தன்னுடைய குடும்ப வணிகத்தையும் மற்றும் சொத்துகளையும் பார்த்துக்கொள்வதற்காக, கோயம்புத்தூர் திரும்பினார். 1973-ஆம் ஆண்டு முதல், குன்னூரிலுள்ள சொத்துகளை அவர் கவனிக்கத் துவங்கினார். வழக்காளரான எஸ்.ஆர். சோமசுந்தரம், கோயம்புத்தூரிலும் மற்றும் சென்னையிலும்

தன்னுடைய கல்வியைத் துவங்கி, அதனை முடித்தப் பின்னர், 1979-ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் திரும்பினார்.

6. 1967 முதல் கலைப்பிலிருந்த வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்டிருந்த கணக்காளரிடமிருந்து, ஜ்ரூப் என்பவரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டு, அந்நிறுவனத்தை நடத்த, 4-ஆம் மறுப்பாளரான சின்னசாமியுடன் சேர்ந்து ஒரு குழுமம் உருவாக்கப்பட்டது. வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தைக் கவனித்துக்கொள்ள 1-ஆம் மறுப்பாளரான எஸ்.கே. குமாரசாமி பொது மேலாளராக நியமிக்கப்பட்டார். 1981-ஆம் ஆண்டில் நிறும மனு எண் 39/1956-இல் ஒரு நிறும விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. விண்ணப்ப எண் 320/1981-க்காதரவாக, "நிறும கலைப்பு நடவடிக்கைகள் முடிக்கப்படவேண்டும்" என வேண்டி, 1-ஆம் மறுப்பாளரான எஸ்.கே. குமாரசாமியால் உறுதிமொழியாவணம் தாக்கல் செய்யப்பட்டது. கடனாளர்களின் கூட்டத்தை நடத்தப் பணித்து, மெட்ராஸ் உயர் நீதிமன்றமானது, 30.4.1981 அன்று ஒரு உத்தரவைப் பிறப்பித்தது. கடனாளர்கள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திட்ட வரைவானது 9.6.1981 அன்று அங்கீகரிக்கப்பட்டு, மெட்ராஸ் உயர் நீதிமன்றமானது, 1-ஆம் மறுப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை 22.1.1982 அன்று அனுமதித்து, கலைப்பு நடவடிக்கைகளை நிரந்தரமாக நிறுத்திவைத்து, இயக்குநர்களின் குழுமத்தினால் வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலையை நடத்துவதை அனுமதித்தது. 3.2.1982 அன்று வழக்காளர்கள், மறுப்பாளர்கள் 1, 4 மற்றும் 10 ஆகியோரை உள்ளடக்கிய இயக்குநர்கள் குழுமத்தின் கட்டுப்பாட்டில் மில்லை கொண்டுவர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "வாசுதேவா இண்டஸ்ரீஸ்" என்ற பெயரானது, "வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ்" என மாற்றம் செய்யப்பட்டது. 1983-ஆம் ஆண்டில் (இதன்பின்னர் "மில்ஸ்" என அழைக்கப்படும்)

"வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ் மில்லானது", பஞ்சாப் வங்கியிலிருந்து கடன்பெற்றது, அதற்கு, வழக்காளர் மற்றும் 10-ஆம் மறுப்பாளர் ஆகியோர் இயக்குநர்கள் என்ற அடிப்படையில் சொந்த பிணையளித்தனர். வழக்காளர் மற்றும் 10-ஆம் மறுப்பாளர் ஆகியோர், 1984-ஆம் ஆண்டில் மேலாண்மை இயக்குநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முன்பு ஸ்வாமி & ஸ்வாமி கோ. குத்தகைக்கு நடத்திக்கொண்டிருந்த மில்லானது (துணியாலையானது), 1984-ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டுவிட்டது. துணியாலையானது இயக்குநர்களின் குழுமத்தினால் நடத்தத் துவங்கப்பட்டபொழுதிலும், 1983, 1984 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் நட்டங்கள் மென்மேலும் குவிந்தன.

7. 6-ஆம் மறுப்பாளரும் மற்றும் 4-ஆம் மறுப்பாளரான சின்னசாமியின் மகனுமான சி. செந்தில் குமரவேல், பாகப்பிரிவினை கோரியும் மற்றும் $^{1}/_{6}$ பங்கை தனக்கு ஒதுக்கக்கோரியும் வேண்டி, 19.1.1984 அன்று மு.வ. எண் 37/1984-ஐ தாக்கல் செய்தார். மு.வ. எண் 37/1984-இன் வழக்காளரான செந்தில் குமரவேல், தானும், மறுப்பாளர்கள் 1, 3, 4, 8, 9 மற்றும் 10 ஆகியோர் இந்து கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்கள் என வழக்குரைத்தார். மு.வ. எண் 37/1984-இல் ஜானகியம்மாள் 8-ஆம் மறுப்பாளராகவும், சண்முக வேலாயுதம் 9-ஆம் மறுப்பாளராகவும், சோமசுந்தரம் 10-ஆம் மறுப்பாளராகவும் மற்றும் சரஸ்வதி 11-ஆம் மறுப்பாளராகவும் சேர்க்கப்பட்டனர். வழக்குரையின் வழக்கு யாதெனில், மறுப்பாளர்கள் 1, 4 மற்றும் மரணமடைந்த கே. ரங்கசாமி ஆகியோருக்கிடையிலான பதியப்பட்ட 7.11.1960 தேதியிடப்பட்ட பதியப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்திற்குப் பின்னரும், அவர்கள் கூட்டாகத் தொடர்ந்து வசித்து, கூட்டாக வணிகம் செய்தனர் என்பதும் மற்றும் முப்பிரிவினரும் கூட்டாகவே வசித்தனர் என்பதுமாகும். மூதாதையர் சொத்தின் வருவாயின் சேமிப்பிலிருந்தும் மற்றும் அச்சொத்துகளை அடகுவைத்து பெற்ற வருவாயிலிருந்தும், வணிகத்திற்குத்

தேவையான முதலீடு செய்யப்பட்டு, அவ்வப்பொழுது அவ்வணிகமானது விரிவாக்கப்பட்டது என்றும் மேலும் வழக்குரையில் கூறப்பட்டது. வழக்காளர் செந்தில்குமரவேல், சொத்துகளில் 1/6 பாகத்திற்கு உரிமையுடையவர் என்றும், மரணமடைந்த கே. ரங்கசாமியை பிரதிநிதித்துவம் செய்யும் 8 முதல் 11 வரையிலான மறுப்பாளர்கள், அனைத்து வழக்குச் சொத்துகளிலும் கூட்டாக 1/3 பங்கிற்கு உரிமையுடையவர்கள் என்றும் வாதிடப்பட்டது. வழக்காளர் பின்வரும் பரிகாரங்களை வேண்டியுள்ளார்:

"அ) அட்டவணைகள் 'ஆ', 'ஈ', 'உ' மற்றும் 'இ'-இல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 9 வரையிலான அனைத்துச் சொத்துகளையும், அவற்றின் எல்லை மற்றும் மண்ணின் தன்மைக்கேற்ப 6 சமப் பங்குகளாகப் பிரித்து, அதில் அவருக்கு 1 பங்கை தனி அனுபவத்துடன் ஒதுக்கவேண்டும்;

ஆ) கீழே விவரிக்கப்பட்டுள்ள அட்டவணை 'இ'-இல் குறிப்பிடப்பட்டுள்ள 10 மற்றும் 11 ஆகிய சொத்துகள் மற்றும் அட்டவணை 'ஈ'-இல் 2-ஆம் வகைச் சொத்து ஆகியவற்றில் 1/6 பங்கும் ஒதுக்க வேண்டும்;

இ) வழக்கு செலவுத்தொகையைச் செலுத்துமாறு மறுப்பாளர்களைப் பணிக்கவேண்டும்;"

8. 'ஆ' வழக்கு அட்டவணைச் சொத்தானது, பல்லடம் மற்றும் சமலபுரம் ஆகிய கிராமங்களிலுள்ள மூதாதையர் சொத்துகள் மற்றும் சதபாளையத்திலுள்ள மூதாதையர் வீடு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அட்டவணை 'இ' அசையாச் சொத்துகள் மற்றும்

குடியிருப்புக் கட்டிடம் ஆகியவற்றை உள்ளடக்கியது; குன்னூர், தி/ள். ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் (பி) லிமிடெட் நிறுவனப் பங்குகள் மற்றும் தி/ள். வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனப் பங்குகள் ஆகியவை 'இ' அட்டவணையில் 10 மற்றும் 11-ஆம் வகைச் சொத்துகளாகக் குறிப்பிடப்பட்டன. மேற்படி வழக்கில் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்கள் அதாவது, 1. எஸ்.கே. குமாரசாமி, 2. அவருடைய மனைவி சுந்தராம்பாள் மற்றும் அவருடைய இளவர் மகன் கந்தவடிவேல் ஆகியோர் மட்டுமே பதிலுரையைத் தாக்கல் செய்தனர். "மறுப்பாளர்கள் 1, 3, 4, 9 மற்றும் 10 ஆகியோர் பெயரில் கூட்டாகச் சொத்துகள் வாங்கப்பட்டன என்பதில் ஐயமில்லை; ஆனால் அவற்றைப் பொருத்தவரையில் கூட்டுப் பங்குதாரர்களாகவே கருதப்படவேண்டும்" என பதிலுரையில் வாதிடப்பட்டது. 1960-ஆம் ஆண்டில் மூன்று பிரிவினருக்கும் பங்குகள் வழங்கப்பட்டன; ஆனால், அதன் பின்னர் கூட்டாகத் தொடர்ந்து வசித்ததை மறுத்து, வாதிடப்பட்டது.

9. மு.வ. எண் 37/1984-இல் வழக்காளர் மற்றும் மறுப்பாளர்களின் கையெழுத்துகள் அடங்கிய விண்ணப்பமானது, உ.வி.மு.ச., ஆணை XXIII, விதி 3-இன் கீழ் 6.8.1984 அன்று வழக்காளரால் தாக்கல் செய்யப்பட்டது. ஆணை XXIII, விதி 3-இன் கீழான விண்ணப்பத்தில் 'அ-ஒ' அட்டவணைச் சொத்துகள் பட்டியலிடப்பட்டு, குடும்பத்தின் உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டதும் குறிப்பிடப்பட்டது. ஆணை XXIII, விதி 3-இன் கீழான விண்ணப்பத்தின் அடிப்படையில், கோயம்புத்தூர் சார்பு நீதிபதி அவர்கள், 6.8.1984 தேதியிடப்பட்ட உத்தரவைப் பிறப்பித்து, சமரச மனுவின் அடிப்படையில் தீர்ப்பாணையை உருவாக்குமாறு பணித்தார்.

10. சமரசத் தீர்ப்பாணையில் பல்வேறு விவசாய சொத்துகள், வீட்டு சொத்துகள் மற்றும் பங்குகள் ஆகியவை பிற இரு பிரிவினர்களுக்கும், அதாவது, எஸ்.கே. குமாரசாமி மற்றும் சின்னசாமி ஆகிய வகையறாக்களுக்கு ஒதுக்கப்பட்டபொழுதிலும், ரங்கசாமி பிரிவினருக்கு, கலைப்பிலிருந்து, இயக்குநர்கள் குழுமத்தினால் நடத்தப்பட மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தினால் 21.1.1982 அன்று உத்தரவிடப்பட்ட வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் பங்குகள் மட்டுமே ஒதுக்கப்பட்டன.

11. 10-ஆம் மறுப்பாளரின் இளவர் குழந்தைகள், 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையில் அவர்கள் தரப்பினர்களல்ல என்ற காரணத்தினடிப்படையில், 6.8.1984 தேதியிடப்பட்ட தீர்ப்பாணையை எதிர்த்து, மு.வ. எண் 827/1987-ஐ தம் தாயார் மூலம் தாக்கல் செய்தனர். 3.8.1987 அன்று ரங்கசாமியின் இரு மகன்களான சண்முகவேலாயுதம் மற்றும் சோமசுந்தரம் ஆகியோரால் மு.வ. எண் 1101/1987 தாக்கல் செய்யப்பட்டது. மு.வ. எண் 1101/1987-இல் மறுப்பாளர்கள் 1, 2 மற்றும் 3 ஆகியோர் பதிலுரை தாக்கல் செய்தனர், அதில் "8.3.1981 அன்று மூன்று பிரிவினருக்குமிடையில் உடன்பாடு எட்டப்பட்டது, அதில், 1-ஆம் மறுப்பாளர், 4-ஆம் மறுப்பாளருக்கு ரூ.4,00,000/- செலுத்தவேண்டும் மற்றும் வழக்காளர், 4-ஆம் மறுப்பாளருக்கு ரூ.7,00,000/- செலுத்தவேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது; ஆனால், 4-ஆம் மறுப்பாளருக்கு அத்தொகையானது செலுத்தப்படாத காரணத்தினால், அவர் தன்னுடைய மகன் மூலம் வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என வாதிடப்பட்டது. 8.6.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையை 8.3.1981 தேதியிடப்பட்ட முந்தைய உடன்பாட்டிற்கு செயல்வடிவம் தருவதாகும் என மேலும் வாதிடப்பட்டது. மு.வ. எண் 827/1987-இல் அவர்கள் 1-ஆம் மறுப்பாளருடன் சமரசம் செய்துகொண்டதாகவும், எனவே, வழக்கைத்

திரும்பப்பெற அனுமதி கோருவதாகவும், இளவர்களின் தாயார் ஒரு உறுதிமொழி ஆவணத்தைத் தாக்கல் செய்தார். 10.2.1993 அன்று மு.வ. எண் 827/1987 திரும்பப் பெறப்பட்டது, அதே நாளன்று மு.வ. எண் 1101/1987-இன் முதல் வழக்காளரான சண்முகவேலாயுதம் வழக்கிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, அதில் 10-ஆம் மறுப்பாளராக இணைந்துகொண்டார். வழக்காளரின் வழக்கை ஆதரித்தும் மற்றும் தன்னுடைய பங்கைக் கோரியும், 8-ஆம் மறுப்பாளரான ஜானகியம்மாளால் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டது. மு.வ. எண் 37/1984-இல் வழக்காளரான செந்தில்குமார், "மு.வ. எண் 37/1984-ஆனது 1-ஆம் மறுப்பாளரான எஸ்.கே. குமாரசாமியின் வேண்டுகோளின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது, 6.8.1984 தேதியிடப்பட்ட தீர்ப்பாணையானது மோசடியானது மற்றும் பெயரளவிலானது, அதற்கு செயலாக்கம் தரத் தேவையில்லை" எனக் கூறி மு.வ. எண் 1101/1987-இல் பதிலுரை தாக்கல் செய்தார். 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களால் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டது. 1-ஆம் மறுப்பாளரின் பதிலுரையை ஆதரித்து, 10-ஆம் மறுப்பாளரும் பதிலுரை தாக்கல் செய்தார். 1-3 வரையிலான மறுப்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரைக்கு வழக்காளர் சோமசுந்தரத்தினால் பதில் தாக்கல் செய்யப்பட்டது.

12. வழக்காளர் தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். வழக்காளரான சோமசுந்தரம் வ.சா.1-ஆக முன்னிலையாகி, வ.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.55 வரையிலான ஆவணங்களைக் குறியிட்டார். மறுப்பாளர்கள் தரப்பில் 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ஜானகியம்மாள், ம.சா.2-ஆக முன்னிலையானார். குமாரசாமி ம.சா.1-ஆக முன்னிலையாகி, மறுப்பாளர்கள் தரப்பில் ம.சா.ஆ.1-ம.சா.ஆ.104 வரையில் குறியிடப்பட்டன. சாட்சிகள் மூலம் எக்ஸ்-1 முதல் எக்ஸ்-27 வரையில் குறியிடப்பட்டன.

13. விசாரணை நீதிமன்றமானது, 5 சட்டப் பிரச்சினைகளையும் மற்றும் 6 கூடுதல் சட்டப் பிரச்சினைகளையும் வரையறுத்தது. கூடுதல் சட்டப் பிரச்சினைகளுள் ஒன்று, வழக்கானது உ.வி.மு.ச., ஆணை XXIII, விதி 23-அ-வின் கீழ் நிலைக்கத்தக்கதா? என்பதாகும். விசாரணை நீதிமன்றமானது, 30.9.1997 தேதியிடப்பட்ட தீர்ப்புரையின்மூலம் வழக்கைத் தள்ளுபடி செய்தது. மு.வ. எண் 1101/1987-ஆனது, உ.வி.மு.ச. ஆணை 23, விதி 23-அ-வினால் தடைசெய்யப்படுகிறது என்னும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களின் வாதத்தை விசாரணை நீதிமன்றம் உறுதிசெய்தது. 7.11.1960 தேதியிடப்பட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் மற்றும் 8.3.1981 தேதியிடப்பட்ட உடன்படிக்கை ஆகியவற்றையுங்கூட விசாரணை நீதிமன்றம் உறுதி செய்தது. "1960-ஆம் ஆண்டிற்குப் பின்னர், மொத்தக் குடும்பமும் கூட்டுக் குடும்பமாக வசிக்கவில்லை. அனைத்து மூன்று பிரிவினரும், சொத்துகளைப் பொருத்தவரையில் கூட்டுரிமையாளர்களாவர் மற்றும் கூட்டாண்மை வணிகம் செய்துவந்தனர்" என விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வழக்கைத் தள்ளுபடி செய்யும் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை எதிர்த்து, உயர் நீதிமன்றத்தில் இரண்டு மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்காளரான சோமசுந்தரத்தினால் மே.வ. எண் 332/1999 தாக்கல் செய்யப்பட்டது. 8-ஆம் மறுப்பாளரான ஜானகியம்மாளால் மே.வ. எண் 281/2000 தாக்கல் செய்யப்பட்டது.

14. மேல்முறையீட்டில் தீர்மானிப்பதற்கான கருத்துகளை உயர் நீதிமன்றம் கவனித்துள்ளது, அதாவது, மு.வ. எண் 1107/1987-ஆனது உ.வி.மு.ச., ஆணை XXIII, விதி 3(அ)-இன் விதிகளின்படி நிலைக்கத்தக்கதா? எனினும், மேற்படி கருத்தின் பரிசீலனையின் அடிப்படையில் அறிந்தமையானது (முடிவானது) பதியப்படுவதற்கிணங்க

மேல்முறையீடுகள் முடிக்கப்படும் என உயர் நீதிமன்றம் கருத்து தெரிவித்தது; எனினும், தரப்பினர்களின் வழக்குரைஞர்களால் விரிவான வாதங்கள் வைக்கப்பட்டபொழுதிலும், உயர் நீதிமன்றத்தினால் வேறு கருத்தேதும் பரிசீலிக்கப்படவில்லை. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் பத்திகள் *163* மற்றும் *164* ஆகியவற்றை எடுத்தளிப்பது பயனுள்ளதாக இருக்கும், அவை பின்வருமாறு:

> *"163.* மேற்படி மேல்முறையீடுகளில் பரிசீலனைக்கெழும் தீர்மானத்திற்கான கருத்தானது, கோயம்புத்தூர் சார்பு நீதிமன்றத்தின் முன்பான மு.வ. எண் *37/1984*-இல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையானது, மோசடியானது, பெயரளவிலானது, சட்டத்திற்கப்பாற்பட்டது, கூட்டு மோசடியானது, நிலைநிறுத்தத்தக்கதல்ல, செல்லத்தக்கதல்ல, செயற்படுத்தத்தக்கதல்ல மற்றும் வழக்காளரை கட்டுப்படுத்தாது என அறிவிக்கக் கோருவது தொடர்பானதாகியும், அது, உ.வி.மு.ச., ஆணை *23*, விதி *3* மற்றும் ஆணை *23*, விதி *3(அ)* ஆகியவற்றின்படி நிலைக்கத்தக்கதா? என்பதாகும்.
>
> *164.* மேற்படி கருத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் மேல்முறையீடுகள் முடிக்கப்படமுடியும் என்பதால், வழக்காளரின் தந்தையாரான ரங்கசாமி, *1*-ஆம் மறுப்பாளரான குமாரசாமி மற்றும் *4*-ஆம் மறுப்பாளரான சின்னசாமி ஆகியோருக்கிடையிலான, *7.11.1960* தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையானது சா.ஆ.பி.*26* செயற்படுத்தப் பட்டதா? இல்லையா? *7.11.1960* தேதிக்குப் பின்னர், மூன்று பிரிவினருக்குமிடையில் கூட்டுக் குடும்பம் இருந்ததா? பல்வேறு

கூட்டாண்மை குழுமங்களின் கீழ் செய்யப்பட்ட பல்வேறு வணிகங்கள், கூட்டுக் குடும்ப வணிகங்களா? என்பனவற்றைக் குறித்து, உரிய வழக்குரைஞர்களால் விரிவான வாதங்கள் வைக்கப்பட்டபொழுதிலும், மேற்படி கருத்தைத் தவிர, தீர்மானத்திற்கான கருத்தெதையும் நாங்கள் வரையறுக்கவில்லை."

15. உயர் நீதிமன்றமானது, உரிய வழக்குரைஞர்களின் வாதங்களைப் பரிசீலித்த பின்னர், மு.வ. எண் 37/1984 வழக்கின் 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையானது செல்லத்தக்கது என்றும் மற்றும் மோசடி செய்யப்பட்டதை நிரூபிக்க வழக்காளர் தவறிவிட்டார் என்றும், மேலும், 1984-ஆம் ஆண்டில், அவர்கள் பஞ்சாப் தேசிய வங்கியிலிருந்து கடன் வாங்க உறுதியளித்தனர் என்பதை நிரூபிக்க வழக்காளர் தவறிவிட்டார் என்றும், எனவே, 1-ஆம் மறுப்பாளரின் அறிவிப்பின் அடிப்படையில் சமரசத் தீர்ப்பாணையானது கையெழுத்திடப்பட்டது மற்றும் வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திற்காகப் பெறப்பட்ட கடனிற்காக, வழக்காளரும் மற்றும் 1-ஆம் மறுப்பாளரும் பொறுப்புறுதியளித்தனர் என்றும், வங்கியின் கோரிக்கையிலிருந்து குடும்பச் சொத்துகளை காக்க, சொத்துகள், 1-ஆம் மறுப்பாளர் மற்றும் 4-ஆம் மறுப்பாளர் ஆகியோர் பெயரில் சொத்துகள் இருக்கவேண்டும், ஆனால், வழக்காளர் மற்றும் பிற மறுப்பாளர்களின் உரிமைகள் குறைபடாதிருக்கும் என 1-ஆம் மறுப்பாளர் அளித்த உறுதிமொழியின் அடிப்படையில், வழக்காளர் 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையில் கையெழுத்திட்டார் என்னும் வழக்கின் அடிப்படையானது நிரூபிக்கப்படவில்லை என உயர் நீதிமன்றம் முடிவிற்கு வந்தது.

16. வழக்காளரால் சொந்த பொறுப்புறுதியேதும் அளிக்கப்பட்டது நிரூபிக்கப்பட வில்லை மற்றும் வழக்காளரால் வாதிடப்படும் அடிப்படையானது வீழ்த்தப்படுகிறது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. வழக்கானது ஆணை XXIII, விதி 3(அ)-இன்படி தடை செய்யப்படுகிறது மற்றும் கிடைக்கத்தக்க பரிகாரமானது, அதே வழக்கில் சமரசத் தீர்ப்பாணையை வினவுவதாகும் என உயர் நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்தது. இரு மேல்முறையீடுகளையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையினால் பாதிப்படைந்து, இவ்விரு மேல்முறையீடுகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

17. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. கிரி மற்றும் மூத்த வழக்குரைஞர் திரு. கௌரவ் அக்ரவால் ஆகியோரின் வாதங்களை நாங்கள் கேட்டோம். வழக்குரைக்கும் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்காக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. கபில் சிபல் முன்னிலையாகியுள்ளார். 11-ஆம் மறுப்பாளருக்காகவும் மற்றும் பிற மறுப்பாளர்களுக்காகவும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. எஸ். நாகமுத்து முன்னிலையாகியுள்ளார்.

18. ஆர். ஜானகியம்மாளுக்காக முன்னிலையாகும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. வி. கிரி வாதிடுவதாவது, "மு.வ. எண் 37/1984-இல் தாக்கல் செய்யப்பட்ட 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையானது, நேர்மையற்றது, தர்மமற்றது மற்றும் மோசடியானது" என்பதாகும். "மு.வ. எண் 37/1984-இல் 8-ஆம் மறுப்பாளரான ஜானகியம்மாள், சமரச விண்ணப்பத்தையோ அல்லது அதன் வாசகங்களையோ அறிந்திருக்கவில்லை; ஜானகியம்மாள் ஒரு கைம்பெண், அவர் தமிழ் மட்டுமே அறிந்தவர், 1-ஆம் மறுப்பாளரின் மனைவியான ம.த.சா.2-ஆல் கொண்டுவரப்பட்ட

ஆங்கிலம் எழுதப்பட்ட தாள்களில் அவர் கையெழுத்திட்டார் எனவும், அவர் வழக்குரைஞர் எவரையும் நியமிக்கவேயில்லை எனவும், கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. திருமால்நேசன், ஒருபொழுதும் அவரால் நியமிக்கப்படவில்லை எனவும், அவர் நீதிமன்றத்திற்குச் சென்றதுமில்லை மற்றும் 6.8.1984 அன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவுமில்லை எனவும், குடும்பமானது, பலநூறு ஏக்கர் நிலங்கள், பல வீடுகள், பல எண்ணிக்கைகளிலான சொத்துகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது, ஆனால், நலிந்த நிறுவனமான வாசுதேவா மில் என அறியப்பட்ட வாசுதேவா இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் ம.த.சா.2-ஆன கமலம் என்னும் பெயரிலுள்ள 200 பங்குகள் மட்டுமே சமரசத் தீர்ப்பாணையில் அவருக்கு (8-ஆம் மறுப்பாளருக்கு) ஒதுக்கப்பட்டன எனவும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. கிரி வாதிடுகிறார்.

19. அவருடைய கணவரிடமிருந்து அவர் பெற்ற சொத்துகள் மற்றும் அவருடைய கணவரின் மரணத்திற்குப் பின்னர் அவர் பெயரில் வாங்கப்பட்ட பல எண்ணிக்கையிலான சொத்துகள் ஆகியவை, அவருக்கு ஒரு அங்குலம் கூட தரப்படாமல், அவை அனைத்தும் மறுப்பாளர்கள் 1 மற்றும் 4 ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டன. சொத்துகளில் முன்பு உரிமைகளேதும் பெற்றிராத 2-ஆம் மறுப்பாளர் (1-ஆம் மறுப்பாளரின் மனைவி) மற்றும் 5-ஆம் மறுப்பாளர் (4-ஆம் மறுப்பாளரின் மனைவி) ஆகியோருக்கு பங்குகள் ஒதுக்கப்பட்டன. ஜானகியம்மாள் மற்றும் அவருடைய மகன் சோமசுந்தரம் ஆகியோர் நலிந்த நிறுமமான வாசுதேவா மில்லின் பங்குகளைத் தவிர, வேறு அசையாச் சொத்துகள் எதையும் சமரசத் தீர்ப்பாணையில் பெறவில்லை. 8-ஆம் மறுப்பாளரால் வக்காலத்து நாமா ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதை, தொடர்புடைய சமரசத் தீர்ப்பாணை பதிகிறது. 8-ஆம் மறுப்பாளரால் வக்காலத்து தாக்கல் செய்யப்படாதபொழுது, அவர் வழக்குரைஞரால் பிரதிநித்துவம்

செய்யப்படவில்லை மற்றும் வழக்குரைஞர் திரு. திருமால்நேசன், 8-ஆம் மறுப்பாளரை பிரதிநிதித்துவம் செய்ததாக நீதிமன்றமானது நம்புமாறு தவறாக வழிநடத்தப்பட்டது.

20. மூன்று சகோதரர்களின் குடும்பம் கூட்டாக வசித்தது மற்றும் 7.11.1960 தேதியிடப்பட்ட பாகப்பிரிவினைக்குப் பின்னரும், அவர்கள் தொடர்ந்து கூட்டுக் குடும்பமாக வசித்து, மூன்று பிரிவுகளின் பெயர்களில் பல சொத்துகளை வாங்கினர் என்றும், குடும்பமானது பல இடங்களில் பல வீடுகள் உட்பட 260 ஏக்கருக்கும் மேலான நிலங்களைக் கொண்டிருந்தது, ஆனால், ஜானகியம்மாளுக்கோ அல்லது அவருடைய மகன்களுக்கோ அசையாச் சொத்தேதும் ஒதுக்கப்படவில்லை என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் வாதிடுகிறார்.

21. எஸ்.கே. குமாரசாமியின் தூண்டுதலால், எஸ்.கே. சின்னசாமியின் மகனான சி. செந்தில்குமரவேலால் மு.வ. எண் 37/1984 தாக்கல் செய்யப்பட்டது. குமாரசாமியின் தூண்டுதலையடுத்தே, மு.வ. எண் 37/1984-ஆனது தன்னால் தாக்கல் செய்யப்பட்டதாக மு.வ. எண் 1101/1987-இல் தாக்கல் செய்த எழுத்துவடிவ பதிலுரையில் சி. செந்தில்குமரவேல் கூறியுள்ளார். மு.வ. எண் 37/1984-இன் தீர்ப்பாணையானது மோசடியானது மற்றும் பெயரளவிலானது என்றும், 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்பாணையின்படி கமலம் பெயரிலிருந்து ஜானகியம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட 200 பங்குகளும் அவருக்கு மாற்றப்படவில்லை என்றும், சி. செந்தில்குமரவேல் மேலும் வாதிட்டார். ஜானகியம்மாள், மு.வ. எண் 1101/1987 வழக்கின் வழக்குரையை முழுமையாக ஆதரித்தார்.

22. 1-ஆம் மறுப்பாளரால் வாதிடப்படும் 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை உடன்படிக்கையானது, வெறும் கற்பனைக் கதையாகும். அத்தகைய உடன்படிக்கையானது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவோ அல்லது

மு.வ. எண் 37/1984-இல் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துவடிவ பதிலுரையில் வாதிடப்படவோ இல்லை. 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையானது நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படாத பொழுதிலும், விசாரணை நீதிமன்றமானது 30.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தன்னுடைய தீர்ப்புரையில், 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின்மூலம் பாகப்பிரிவினை நிகழ்ந்ததென்னும் பொருண்மையையும் மற்றும் 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையானது 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை உடன்படிக்கையின் பொருட்டே நிறைவேற்றப்பட்டதென்னும் 1-ஆம் மறுப்பாளரின் வழக்கையும் தவறாக ஏற்றுள்ளது.

23. 1981-ஆம் ஆண்டில் பாகப்பிரிவினையேதும் நிகழவில்லை மற்றும் குடும்பமானது கூட்டுக் குடும்பமாகவே இருந்தது. மு.வ. எண் 37/1984-இல் தடாபத்தில் 1-ஆம் மறுப்பாளரின் பெயரிலுள்ள வீட்டுச் சொத்தானது சேர்க்கப்படவில்லை, அச்சொத்தானது 1-ஆம் மறுப்பாளரின் பெயரில் வாங்கப்பட்டு, மூன்று பிரிவினர்களும் தடாபத்திலுள்ள அச்சொத்தில் பங்குடையவர்களாவர் மற்றும் அது மு.வ. எண் 1101/1987 வழக்கின் 'இ' அட்டவணையில் பத்தாம் வகையினச் சொத்தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

24. 8.3.1981 தேதியிடப்பட்ட உடன்படிக்கையின்கீழ் 4-ஆம் மறுப்பாளருக்கு வழக்காளர் ரூ.7 இலட்சம் தரவேண்டும் மற்றும் 4-ஆம் மறுப்பாளருக்கு 1-ஆம் மறுப்பாளர் ரூ.4 இலட்சம் செலுத்தவேண்டும் என்னும் 1-ஆம் மறுப்பாளரின் வாதமானது, அவரால் ஏற்படுத்தப்பட்ட கற்பனைக் கதையாகும். 8.3.1981 அன்று அத்தகைய உடன்படிக்கையேதும் நிகழவுமில்லை மற்றும் வழக்காளர் 4-ஆம் மறுப்பாளருக்கு தொகையேதும் செலுத்தப்படவேண்டியதுமில்லை. தடாபத்திலுள்ள 1978-ஆம் ஆண்டில் கூட்டுக் குடும்ப நிதியிலிருந்து வாங்கப்பட்ட வீட்டுச் சொத்தானது, மு.வ. எண் 37/1984

வழக்கில் சேர்க்கப்படவில்லை மற்றும் அவ்வீட்டுச் சொத்தில் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் பங்கு கொண்டிருந்தனர். ஜானகியம்மாளால் அவருடைய கணவரின் மரணத்திற்குப் பின்னர், காப்பீட்டுக் கழகத்திலிருந்து பெறப்பட்ட ரூ.1,03,000/-ஆனது 1-ஆம் மறுப்பாளரிடம் தரப்பட்டு, அது, வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. வாதிடப்பட்டவாறு, உயர் நீதிமன்றமானது ஜானகியம்மாளின் வழக்கைப் பரிசீலிக்கவில்லை.

25. உரிமையியல் மேல்முறையீட்டெண் 1538/2016-இல் சோமசுந்தரம் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. கௌரவ் அக்ரவால் வாதிடுவதாவது, "நிலங்கள் மற்றும் வீடுகள் உட்பட, வழக்காளரின் அசையாச் சொத்துகள் பறிக்கப்பட்டு, 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையின்மூலம் மதிப்பற்ற பங்குகள் மட்டுமே தரப்பட்டன." 6.8.1984 தேதியிடப்பட்ட தீர்ப்பாணையானது செல்லாதது, செயற்படுத்தத்தகாதது மற்றும் மோசடியானது என அறிவிக்கவே மு.வ. எண் 1101/1987 வழக்கானது வழக்காளரால் தாக்கல் செய்யப்பட்டதென அவர் வாதிடுகின்றார்.

26. 6.8.1984 அன்று மறுப்பாளரால் வழக்காளர் நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, பஞ்சாப் தேசிய வங்கியிலிருந்து வாசுதேவா டெக்ஸ்டைல் மில்லிற்காக வாங்கப்பட்ட கடனிற்காக வழக்காளரும் மற்றும் 10-ஆம் மறுப்பாளரும் பொறுப்புறுதியளித்திருந்ததையடுத்து, குடும்பச் சொத்துகளைப் பாதுகாக்கும்பொருட்டு, அவர்கள் பெயரில் அசையாச் சொத்துகளேதும் இருக்கக்கூடாதெனக்கூறி, சமரச விண்ணப்பத்தில் கையெழுத்திடுமாறு வழக்காளர் கோரப்பட்டார் என்றும் மற்றும் 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையானது செயற்படுத்தப்படாதென்பதால், அவருடைய (வழக்காளரின்) அசையாச் சொத்தின் உரிமையேதும் பறிக்கப்படாது பாதுகாக்கப்படும் என 1-ஆம் மறுப்பாளர் உறுதியளித்தார் என்றும் வாதிடப்படுகிறது.

27. சமரசத் தீர்ப்பாணையில் சொத்துகள் ஒதுக்கப்பட்டது நேர்மையற்றது மற்றும் தீர்ப்பாணை பெறுவதில் வழக்காளரிடத்தும் மற்றும் நீதிமன்றத்திலும் மோசடி நிகழ்த்தப்பட்டதென்றும் வாதிடப்படுகிறது. நீதிமன்றத்தில் மோசடி நிகழ்த்தப்படும் வழக்கை ஆணை XXIII, விதி 3(அ) கையாளாது என வாதிடப்படுகிறது. பொய்யான வழக்குமூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட மு.வ. எண் 37/1984-க்கு ஆணை XXIII, விதி 3(அ)-இன் தடை பொருந்தாது. உயர் நீதிமன்றமானது, வழக்கானது ஆணை XXIII, விதி 3(அ)-இன் கீழ் தடை செய்யப்படுவதை அறிந்தபின்னர், பிற பிரச்சினைகளுக்குள் செல்லவில்லை. மு.வ. எண் 1101/1987 வழக்கின் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள தடாபத் வீட்டுச் சொத்தானது, மு.வ. எண் 37/1984 வழக்கில் அட்டவணையில் சேர்க்கப்படவில்லை. எனவே, தடாபத் வீட்டுச் சொத்தின் பங்கிற்கான வழக்கானது முற்றிலும் நிலைக்கத்தக்கதாகும். வழக்காளர், துணி (டெக்ஸ்டைல்) தொழிற்நுட்பப் பட்டத்தை முடித்துள்ளார். வாசுதேவா நிறுவனமானது குடும்ப நிறுவனமல்ல, தகராறிலுள்ள அந்நிறுவனமானது ஆதாயம் ஈட்டக்கூடிய நிறுவனமல்ல. 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட தொடர்புடையத் தீர்ப்பாணையானது செயற்படுத்தப்படவேயில்லை. மேற்படி நிறுவனமானது புத்துயிரளிக்கப்பட முடியாமல், 1987-ஆம் ஆண்டில் மூடப்பட்டது. 1-ஆம் மறுப்பாளர், 1989-ஆம் ஆண்டில் அதிலிருந்து விலகும்வரையில், அதனைத் தொடர்ந்து நிர்வகித்து வந்தார்.

28. 7.11.1960 தேதியிடப்பட்ட பாகப் பிரிவினையானது செயலாக்கப்பட்டது மற்றும் மூன்று பிரிவினர்களின் வருமான வரி விவரங்கள், 1960-ஆம் ஆண்டைய பாகப் பிரிவினையின் அடிப்படையிலேயே தாக்கல் செய்யப்பட்டன; 1981-ஆம் ஆண்டின் ஏற்பாட்டின்படி, 1-ஆம் மறுப்பாளர், குன்னூரிலுள்ள சொத்துகளை எடுத்துக்கொள்ள

வேண்டியது. 4-ஆம் மறுப்பாளர், சோமனூரிலுள்ள சொத்துகளை எடுத்துக்கொள்ள வேண்டியது; வழக்காளரும் மற்றும் 1-ஆம் மறுப்பாளரும், வாசுதேவா துணியாலையை (டெக்ஸ்டைல்ஸ்) எடுத்துக்கொள்ள முடிவுசெய்தனர்; மு.வ. எண் 37/1984-ஆனது 4-ஆம் மறுப்பாளரின் தூண்டுதலின் அடிப்படையில், அவருடைய மகனால் தாக்கல் செய்யப்பட்டது என்னும் மேல்முறையீட்டாளர்களின் வாதங்களை மறுத்து, திரு. கபில் சிபல் வாதிடுகின்றார்.

29. ஜானகியம்மாள் மற்றும் சோமசுந்தரம் உட்பட அனைத்து மறுப்பாளர்களும் கையெழுத்திட்டுள்ள சமரசத் தீர்ப்பாணையின் அடிப்படையிலேயே மு.வ. எண் 37/1984-ஆனது தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது; 8 முதல் 11 வரையிலான மறுப்பாளர்களை பிரதிநிதித்துவம் செய்த வழக்குரைஞர் திரு. திருமால்நேசனால் 7 முதல் 11 வரையிலான மறுப்பாளர் தரப்பில் வக்காலத்து நாமா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என திரு. சிபல் வாதிடுகின்றார். வழக்காளர் மற்றும் 10-ஆம் மறுப்பாளர்கள் அனைவரும் படித்தவர்கள், அவர்கள் அனைவரும் சமரசத் தீர்ப்பாணையில் கையெழுத்திட்டுள்ளனர். அவர்கள் தவறான கருத்துரையின்படியோ அல்லது மோசடியினாலோ கையெழுத்திட்டதாகக் கூற முடியாதென வாதிடப்படுகிறது.

30. வழக்காளரும் மற்றும் 10-ஆம் மறுப்பாளரும் தம்முடைய பங்காக துணியாலையை (மில்லை) எடுத்துக்கொள்ள விரும்பினர். எனவே துணியாலையின் பங்குகள் ரங்கசாமியின் வாரிசுகளுக்கு ஒதுக்கப்பட்டன. ரங்கசாமியின் வாரிசுகள் துணியாலையின் 95% பங்குகளைக் கொண்டுள்ளனர், அதாவது, அந்நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் பங்குகளைக் கொண்டுள்ளனர். துணியாலையானது ரூ.32 இலட்சம் என மதிப்பிடப்பட்டது. சமரசத் தீர்ப்பாணையில் மோசடியேதுமில்லை. 6.8.1984 தேதியிடப்பட்ட

சமரசத் தீர்ப்பாணையானது செயற்படுத்தப்பட்டது. 1960-ஆம் ஆண்டில் பாகப் பிரிவினை ஏற்பட்டதையடுத்து, அங்கு கூட்டுக் குடும்பமுமில்லை அல்லது கூட்டுக் குடும்பச் சொத்துகளுமில்லை. பங்கேதும் பெறவேண்டாம் என அவருடைய தாயாரும் மற்றும் சகோதரியும் தெரிவித்ததாக வழக்காளரால் வாதிடப்பட்டது. 1989-ஆம் ஆண்டு, வழக்காளர், வாசுதேவா துணியாலையை (மில்லை) விற்றுள்ளார்.

31. வழக்காளரின் வாதங்களேதும் மோசடி வரையறைக்குள் வரவில்லை, வழக்காளரிடம் மோசடியேதும் நிகழ்த்தப்படவில்லை மற்றும் ஆணை XXIII, விதி 3(அ)-இன் கீழ் மோசடியை வினவி தனி வழக்கேதும் தொடுத்திருக்கமுடியாது என திரு. சிபல் வாதிடுகின்றார்.

32. வழக்காளருக்குள்ள பரிகாரமானது, மு.வ. எண் 37/1984-இல் விண்ணப்பம் தாக்கல் செய்வது அல்லது அவ்வழக்கின் தீர்ப்பாணைக்கெதிராக மேல்முறையிடுவது என்றும், மு.வ. எண் 1101/1987 தாக்கல் செய்யப்பட்டது, வழக்காளரால் நிகழ்த்தப்பட்ட வழக்குச் சூதாட்டமாகும் என திரு. சிபல் வாதிடுகின்றார். வழக்காளரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது, செலவுத்தொகைகளுடன் தள்ளுபடி செய்யத்தக்கதாகிறது என சிபல் வாதிடுகின்றார்.

33. 11-ஆம் மறுப்பாளருக்காக முன்னிலையாகும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர், கீழமை நீதிமன்றங்களின் தீர்ப்புரையை ஆதரித்தார். 1989-ஆம் ஆண்டு முதல் பங்குகள் விற்பனை துவங்கியது. 1-ஆம் மறுப்பாளர் துணியாலை (மில்லின்) பங்குகளை வாங்கினார். 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையானது செயற்படுத்தப்பட்டது. 1994-ஆம் ஆண்டில் துணியாலையின் முழு பங்குகளும்

மாற்றப்பட்டன என அவர் வாதிட்டார். 11-ஆம் மறுப்பாளரும் மற்றும் பிற மறுப்பாளர்களும் பங்குகளை பெற்றவர்கள் என திரு. நாகமுத்து வாதிடுகின்றார்.

34. ஜானகியம்மாளின் வழக்கு யாதெனில், ஜானகியம்மாள் வழக்குரைஞர் எவரையும் எக்காலத்திலும் நியமிக்கவில்லை. அவர், தமிழ் சமரச விண்ணப்பத்தில் கையெழுத்திட்டார்; அவருக்கு ஆங்கிலம் தெரியாதென்பதும் மற்றும் சமரச விண்ணப்பமானது ஆங்கிலத்தில் எழுதப்பட்டதென்பதும், வணிக நோக்கங்களுக்காகவும் மற்றும் வரி செலுத்துவதற்காகவும் வழக்கமாக அவ்வப்பொழுது ஜானகியம்மாளின் கையெழுத்தைப் பெறும் 1-ஆம் மறுப்பாளரின் மனைவியான 2-ஆம் மறுப்பாளர், ஜானகியம்மாளின் கையெழுத்தை சமரச விண்ணப்பத்தில் பெற்றுவிட்டார் என்பது ஜானகியம்மாளின் வழக்காகும் என திரு. கிரி மறுப்பு வாதத்தில் வாதிடுகின்றார். குடும்பமானது பல்வேறு வணிகங்களை நடத்தி வந்தது. மு.வ. எண் 37/1984-இல் 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது, "8 முதல் 13 வரையிலான மறுப்பாளர்களின் வக்காலத்துநாமா தாக்கல் செய்யப்படவில்லை" என கூறுகிறது என்று திரு. கிரி வாதிடுகின்றார். 8 முதல் 13 வரையிலான மறுப்பாளர்களின் தரப்பில் திருமால்நேசனால் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்துநாமாவின் சான்றிடப்பட்ட நகலுங்கூட, ஆவணத்தில் கொண்டுவரப்படவில்லை. 1-ஆம் மறுப்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தாள்களின்படி, வக்காலத்துநாமாவும் மற்றும் ஆவணங்களும் அழிக்கப்பட்டுவிட்டன என்றும், வக்காலத்துநாமா அழிக்கப்பட்டுவிட்டதாக எவ்வாறு 1-ஆம் மறுப்பாளர் கூறமுடியும் என திரு. கிரி வாதிடுகின்றார்.

35. மு.வ. எண் 1101/1987-இன் 'இ' அட்டவணையில் 10-ஆம் இனச் சொத்தாகச் சேர்க்கப்பட்டுள்ள தடாபத்திலுள்ள வீட்டுச் சொத்தானது கூட்டுக் குடும்ப

நிதியிலிருந்து வாங்கப்பட்டது; அவ்வீடானது 1-ஆம் மறுப்பாளரால் ஏலத்தில் எடுக்கப்பட்டபொழுதிலும், அவ்வீட்டிற்கானத் தொகையனது 1-ஆம் மறுப்பாளரால் தனிப்பட்டமுறையில் செலுத்தப்படவில்லை; அத்தொகையானது, தனியார் நிறுமமான (ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ்) நிறுவனத்திலிருந்து பெறப்பட்டது; அதில், மறுப்பாளர்கள் 1, 4 மற்றும் 10 ஆகியோர் பங்குகளைக் கொண்டிருந்தனர். சுவாமி அண்டு சுவாமி ப்ளாண்டேஷன் நிறுவனத்தில் ரங்கசாமி வாரிசுகள் $^{1}/_{3}$-க்கும் மேலான பங்குகளைப் பெற்றிருந்தனர். தடாபத் வீடானது குடும்ப வணிகமான தனியார் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டுள்ளது, அதில், அனைத்து வாரிசுகளும் பங்குடையவர்களாவர். மு.வ. எண் 37/1984-ஆனது தடாபத் வீட்டை உள்ளடக்கவில்லை, தடாபத் வீட்டின் பாகப்பிரிவினைக்கான வழக்கான மு.வ. எண் 1101/1987-ஆனது முற்றிலும் நிலைக்கத்தக்கதாகும். மேற்படி வீட்டில் வழக்காளருக்கு பங்கு தராததன்மூலம், இரு கீழமை நீதிமன்றங்களும் தவறிழைத்துவிட்டன என திரு. கிரி வாதிடுகின்றார்.

36. விசாரணை நீதிமன்றத்தினால் வரையறுக்கப்பட்ட பிரச்சினைகளுள் ஒன்று உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் ஆணை XXIII, விதி 3(அ)-இன்படி வழக்கானது நிலைக்கத்தக்கதில்லையா? என்பதாகும்.

37. உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் ஆணை XXIII, விதி 3(அ)-இன் கீழ் சமரசத் தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கும் வழக்கானது தடை செய்யப்படுகிறதென முடிவு செய்து, விசாரணை நீதிமன்றமானது மேற்படி பிரச்சினையில் வழக்காளருக்கெதிராகத் தீர்ப்பளித்தது.

38. மேற்குறிப்பிட்டவாறு, 6.8.1984 தேதியிடப்பட்ட சமரசத் தீர்ப்பாணையை எதிர்த்து, வழக்காளரான சோமசுந்தரத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மு.வ. எண் 1101/1997 வழக்கானது, உ.வி.மு.ச., ஆணை XXIII, விதி 3(அ)-இன் கீழ் தடை செய்யப்படுகிறதா? என்ற ஒரு கருத்தைக் குறித்தே, மேல்முறையீடானது முடிவுசெய்யப்படவேண்டும் என உயர் நீதிமன்றமானது, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் கருத்துத் தெரிவித்துள்ளது. உயர் நீதிமன்றமானது எதிர்ப்பிற்குள்ளான தன்னுடைய தீர்ப்புரையில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளைச் சார்ந்து, "சமரசத் தீர்ப்புரையை வினவி தனி வழக்காடுதல் நிலைக்கத்தக்கதல்ல, எனவே மு.வ. எண் 1101/1987 தடை செய்யப்பட்டது" எனத் தீர்ப்பளித்தது. மு.வ. எண் 1101/1987-ஆனது நிலைக்கத்தக்கதல்ல என இரு நீதிமன்றங்களுமே தீர்ப்பளித்துள்ளன; மேற்படி பிரச்சினையை முதலில் பரிசீலிப்பது பொருத்தமானதென நாங்கள் கருதுகின்றோம்.

39. ஆணை XXIII, விதி 3 வழக்கின் சமரசத்திற்கு வழிகோலுகிறது. விதி 3-இல் 1976-ஆம் ஆண்டைய 104-ஆம் சட்டத்தின்மூலம், விளக்க வாசகம் மற்றும் விளக்கம் ஆகியவை சேர்க்கப்பட்டன. ஆணை XXIII, விதி 3-ஆனது பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:

> "3. **வழக்கு சமரசம்.-** வழக்கானது முற்றிலுமோ அல்லது பகுதியாகவோ, சட்டப்பூர்வ உடன்படிக்கையின் மூலமோ அல்லது எழுத்து வடிவிலான சமரசமானது தரப்பினர்களால் கையெழுத்திடப் பட்டுள்ளதென நீதிமன்றமானது திருப்தியுறும்வகையில் நிரூபிக்கப்படுமிடத்தும் அல்லது வழக்கின் முதற்பொருள் தொடர்பாக மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ

வழக்காளரை மறுப்பாளர் திருப்தியுறச் செய்யுமிடத்தும், அத்தகைய உடன்பாட்டையோ, சமரசம் அல்லது முழுநிறைவையோ பதியுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டு, அது வழக்கின் தரப்பினர்கள் தொடர்பாக இருப்பதால், உடன்படிக்கையோ, சமரசம் அல்லது நிறைவேற்றலின் முதற்பொருளானது வழக்கில் முதற்பொருளாயினும் அல்லது இல்லாவிடினும், அதற்கிணங்கத் தீர்ப்பளிக்கவேண்டும்:

உடன்பட்டுள்ளதை அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதை ஒரு தரப்பினர் கூறி, அதனை மறுதரப்பினர் மறுக்குமிடத்து, அவ்வினாவை நீதிமன்றம் முடிவுசெய்யவேண்டும்; ஆனால், அவ்வினாவை முடிவுசெய்யும் நோக்கிற்காக, ஒத்திவைத்தலைப் பதிவதற்கான காரணம் இருப்பதாக நீதிமன்றம் கருதினாலன்றி, வழக்கை ஒத்திவைத்தல் கூடாது.

விளக்கம்-*1872*-ஆம் ஆண்டைய உடன்படிக்கைச் சட்டம் *(9/1872)*-இன் கீழ் இல்லாத அல்லது செல்லாத உடன்படிக்கை அல்லது சமரசமானது, இவ்விதியின் கீழ் சட்டப்பூர்வமாகக் கருதப்படக்கூடாது;"

40. 1976-ஆம் ஆண்டைய *104*-ஆம் சட்டமான அதே திருத்தச் சட்டத்தின் மூலம் புதிய விதியான விதி *3(அ)* சேர்க்கப்பட்டது.

"3(அ) **வழக்கிற்குத் தடை.**- எந்த சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணை வழங்கப்பட்டதோ, அந்த சமரசமானது

சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில், தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய வழக்கேதும் தாக்கல் செய்யப்படக்கூடாது."

41. நபர்களுக்கும் மற்றும் நிறுவனங்களுக்குமிடையிலான தகராறுகளைத் தீர்மானித்தல் சட்டத்தினால் நெறிப்படுத்தப்படுகிறது. அனைத்த சட்டங்களின் சட்டமியற்றும் கொள்கையானது, தகராறைத் தீர்மானிப்பதற்கான வழிமுறையை வகுத்து, அதன்மூலம் தகராறை முடிவிற்குக் கொண்டுவந்து சமூகத்தில் அமைதியை நிலைநாட்டுவதாகும். பாதிக்கப்பட்ட தரப்பினரின் குறைபாடுகளுக்கு வளைந்துகொடுக்க, மேல் நீதிமன்றத்தில் மேல்முறையீடு/சீராய்வு ஆகிய சமப் பரிகாரங்களை வழங்கி, சட்டக்கொள்கையானது வழக்கின் முடிவை இலக்காகக் கொள்கிறது. மேற்படி திருத்தத்தின்மூலம் சேர்க்கப்பட்ட 3(அ), எந்த சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணை வழங்கப்பட்டதோ, அந்த சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில், தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய வழக்கேதும் தாக்கல் செய்யப்படக் கூடாது என வகைசெய்கிறது. அதேநேரத்தில், விதி 3-இல் விளக்க வாசகம் சேர்ப்பதன்மூலம், இணக்கம் அல்லது நிறைவேற்றல் எட்டப்பட்டதா என்பது குறித்து தகராறிருக்கும்பொழுது, சமரசத்தைப் பதிந்த நீதிமன்றமே, அதனை முடிவுசெய்ய வேண்டும் என வகைசெய்கிறது. ஒரு வழக்கானது சட்டப்பூர்வ உடன்படிக்கை அல்லது சமரசத்தின்மூலம் சரிசெய்யப்பட்டுள்ளதென நீதிமன்றம் திருப்தியுறும்வகையில் நிரூபிக்கப்படுமிடத்து, அத்தகைய உடன்படிக்கை அல்லது சமரசமானது பதியப்பட நீதிமன்றம் உத்தரவிட்டு, அதற்கிணங்க தீர்ப்பாணை வழங்கவேண்டுமென ஆணை XXIII, விதி 3 வகைசெய்தது. விதி 3, "சட்டப்பூர்வ உடன்படிக்கை அல்லது சமரசம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. திருத்தத்தின்மூலம் சேர்க்கப்பட்ட விளக்கமானது,

1872-ஆம் ஆண்டைய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் இல்லாத அல்லது செல்லத்தகாத ஒரு உடன்படிக்கை அல்லது ஒரு சமரசமானது, சட்டப்பூர்வமானதென கருதப்படக்கூடாது என கூறியது.

42. விதி 3, விளக்கவாசகம் மற்றும் விளக்கத்துடன் படிப்பதில் இல்லாத அல்லது செல்லத்தகாத உடன்படிக்கை அல்லது சமரசமானது நீதிமன்றங்களால் பதியப்படமுடியாது. ஒருவேளை பதியப்பட்டாலும், அத்தகையப் பதிவை எதிர்க்கும் வினாவை நீதிமன்றம் முடிவுசெய்யவேண்டும். விளக்கமானது, இந்திய ஒப்பந்தச் சட்டத்தைச் சுட்டுகிறது. இந்திய ஒப்பந்தச் சட்டமானது, இல்லாத அல்லது செல்லத்தகாத உடன்படிக்கைகள் குறித்துத் தெரிவிக்கிறது. அனைத்து உடன்படிக்கைகளும், இல்லா ஒப்பந்தமாக வெளிப்படையாக அறிவிக்கப்படாத சட்டப்படியான நோக்குடன் மற்றும் சட்டப்பூர்வ மறுபயனுக்காக ஒப்பந்தம் மேற்கொள்ளத் தகுதிவாய்ந்த தரப்பினர்களின் தன்னிச்சையான இசைவுடன் மேற்கொள்ளப்படுமெனில், அவை ஒப்பந்தங்களாகின்றன என ஒப்பந்தச் சட்டப்பிரிவு 10 தெரிவிக்கிறது. பிரிவு 14 "தன்னிச்சையான இசைவை" பின்வரும் சொற்களில் வரையறுக்கிறது:-

"14. **"தன்னிச்சையான இசைவு" வரையறுக்கப்படுகிறது.**-

பின்வருவனவற்றால் ஏற்படுத்தப்படாத இசைவே தன்னிச்சையானதாகும். அவை-

(1) பிரிவு 15-இல் வரையறுக்கப்பட்டவாறு அச்சுறுத்தல் அல்லது

(2) பிரிவு 16-இல் வரையறுக்கப்பட்டவாறு முறையற்ற செல்வாக்கு அல்லது

(3) பிரிவு 17-இல் வரையறுக்கப்பட்டவாறு மோசடி அல்லது

(4) பிரிவு 18-இல் வரையறுக்கப்பட்டவாறு திரித்துரைத்தல் அல்லது

(5) பிரிவுகள் 20, 21 மற்றும் 22 ஆகியவற்றின் விதிகளுக்குட்பட்டு தவறு.

இசைவானதளிக்கப்பட்டிருக்காது ஆனால் அச்சுறுத்தல், முறையற்ற செல்வாக்கு, மோசடி, திரித்துரைத்தல் அல்லது தவறு போன்றவற்றால் அளிக்கப்பட்டிருக்கும்பொழுது அவ்விசைவானது ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது."

43. ஒரு இசைவானது, அச்சுறுத்தல், முறையற்ற செல்வாக்கு, மோசடி, திரித்துரைத்தல் அல்லது தவறு போன்றவற்றால் ஏற்படுத்தப்படும்பொழுது அது தன்னிச்சையான இசைவல்ல. அத்தகைய உடன்படிக்கையானது தன்னிச்சையான இசைவுத் தேவைப்படுமெனில் அது ஒப்பந்தமல்ல. பிரிவுகள் 15, 16, 17 மற்றும் 18 ஆகியவை அச்சுறுத்தல், முறையற்ற செல்வாக்கு, மோசடி மற்றும் திரித்துரைத்தல் ஆகியவற்றை வரையறுக்கின்றன. பிரிவு 19 தன்னிச்சையான இசைவற்ற உடன்படிக்கைகளின் செல்லாமையை வரையறுக்கிறது. பிரிவு 19-இன் விளைவு பின்வருமாறு:-

"19. **விரும்பா இசைவின் உடன்படிக்கைகளின் செல்லாமை.**- உடன்படிக்கைக்கான இசைவானது, அச்சுறுத்தல், முறையற்ற செல்வாக்கு அல்லது திரித்துரைத்தல் மூலம் ஏற்படுத்தப்படும் பொழுது, அவ்வுடன்படிக்கையானது, அவ்வாறு இசைவளிக்கப்பட்ட தரப்பினரின் விருப்பத்தில் செல்லத்தகா ஒப்பந்தமாகிறது.

மோசடி அல்லது திரித்தல் மூலம் இசைவுப் பெறப்பட்ட ஒப்பந்தத் தரப்பினர் பொருத்தமென கருதுவாரெனில், ஒப்பந்தமானது நிறைவேற்றப்பட்டு, கூறப்பட்டது உண்மையாக இருக்குமெனில் தனக்குரிய இடத்தில் தன்னை வைக்கவேண்டுமென வற்புறுத்தலாம்.

விளக்கம்.- அத்தகைய இசைவானது திரித்துரைத்தல் அல்லது அமைதிகாத்தல், பிரிவு 17-இன் கீழ் மோசடி போன்றவற்றின் மூலம் பெறப்பட்டதெனில், தரப்பினர் எவருடைய இசைவானது பெறப்பட்டதோ, அவர் சாதாரண அறிவைப் பயன்படுத்தி உண்மையை அறியும் வாய்ப்பைப் பெற்றிருந்தாரெனில் அவ்வொப்பந்தமானது செல்லத்தகாததல்ல.

விளக்கம்.- தரப்பினரிடம் நிகழ்த்தப்பட்டு, ஒப்பந்த இசைவை ஏற்படுத்தாத மோசடி அல்லது திரித்துரைத்தல் ஆகியவை ஒப்பந்தத்தைச் செல்லாததாக்காது."

44. பிரிவுகள் 10, 13 மற்றும் 14 ஆகியவற்றை ஒருங்கிணைத்து வாசித்தலானது, இசைவானது, அச்சுறுத்தல், முறையற்ற செல்வாக்கு, மோசடி, திரித்துரைத்தல் அல்லது தவறு ஆகியவற்றின் மூலம் பெறப்படும்பொழுது, அத்தகைய இசைவானது விருப்ப இசைவல்ல மற்றும் எவருடைய இசைவானது, அச்சுறுத்தல், மோசடி அல்லது திரித்துரைத்தல் மூலம் பெறப்பட்டதோ, அவருடைய விருப்பத்தின் அடிப்படையில் மேற்படி ஒப்பந்தமானது செல்லத்தகாததாகிறது எனத் தெரிவிக்கின்றன. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் இல்லாத அல்லது செல்லத்தகாத

உடன்படிக்கையானது, ஆணை XXIII விதி 3-இல் கூறப்படுவதுபோன்று சட்டப்பூர்வமாக கருதப்படக்கூடாது.

45. 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையானது, மு.வ. எண் 1101/1987-இன் வழக்குரையின் மூலம் குற்றஞ்சாட்டப்படும் காரணங்களை நாம் ஆய்வு செய்யவேண்டியுள்ளது. ஆணை XXIII, விதி 3-இன்படி சமரச ஆவணத்தைக் குற்றஞ்சாட்டுவதற்கான காரணங்கள், அதனை பதியும் நீதிமன்றத்தின் முன்பாக எழுப்பப்படமுடியுமா? சமரசத் தீர்ப்பாணையை வினவி தாக்கல் செய்யப்பட்ட மு.வ. எண் 1101/1987-இன் அடிப்படைக் காரணங்களை நாம் கவனிக்கவேண்டியுள்ளது. வழக்குரையின் பத்திகள் 12 மற்றும் 13 ஆகியவை பின்வருமாறு குற்றச்சாட்டுக்களைக் கொண்டுள்ளன:-

> "12. 1984-ஆம் ஆண்டின் துவக்கத்தில் பல இலட்சங்கள் கடனிற்காக வங்கிக்கு வழக்காளர் தனிப்பட்ட பொறுப்புறுதி அளித்திருப்பதை அடுத்து வழக்காளரின் பெயரில் குடும்பச் சொத்துகளை வைத்திருப்பது உகந்ததல்ல மற்றும் கேடானதாகும் மற்றும் உரிமையாளர்களின் ஆவணங்களில் வழக்காளரின் பெயர் இல்லாமலிருப்பது சாதகமானதும் மற்றும் பாதுகாப்பானதுமாகும் என 1-ஆம் மறுப்பாளர் திரித்துரைத்தார். அங்குங்கூட 1-ஆம் மறுப்பாளரின் அறிவுறுத்தல் மற்றும் விவேகம் ஆகியவற்றை வழக்காளர் நிராகரிக்கவில்லை. மேலும் வங்கி, கோரிக்கை இடையூறை தவிர்ப்பதற்காக ஆவண நோக்கிற்காக குடும்பச் சொத்துகள் 1 மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களின் பெயரில்

வைக்கப்படும் என 1-ஆம் மறுப்பாளர் கூறினார். இந்த ஏற்பாடானது வழக்காளரின் சட்டப்பூர்வ பகையை பாதிக்கவோ அல்லது விலக்காதென 1-ஆம் மறுப்பாளர் உறுதியளித்தார். இங்கும் 1-ஆம் மறுப்பாளருக்கு வழக்காளர் கீழ்பணிந்து, அவருடைய முடிவு மற்றும் அறிவுறுத்தல்களுக்கிணங்க செயல்பட்டார்.

(13) 1-ஆம் மறுப்பாளர், குடும்ப வழக்குரைஞர் மூலம் கோயமுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஏற்பாடு செய்தார். அது ஒரு கூட்டு சூழ்ச்சி வழக்காகும் மற்றும் நம்பவைக்கும் விவரங்களாகும். பாகப்பிரிவினைக்காக நீதிமன்றத்திற்குப்போக, குடும்ப உறுப்பினர்கள் எவருக்கும் கருத்து வேறுபாடோ அல்லது கோபமோ இல்லை."

46. ஒட்டுமொத்த நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட தீர்ப்பாணை ஆகியவை, வழக்காளருக்கெதிராக மட்டுமன்றி, நீதிமன்றத்திற்கு எதிராகவும் நிகழ்த்தப்பட்ட மோசடியாகும் என வழக்குரையின் பத்தி 15-இல் வழக்காளர் மேலும் வாதிட்டார். சொத்துகளைக் காப்பதற்காக மட்டுமே நீதிமன்றத்தில் பெற எண்ணப்பட்ட தீர்ப்பாணையானது, மோசடியானதால், அது மோசடியானதும் மற்றும் பெயரளவிலானதுமாகும்.

47. மேற்படி விவரங்களிலிருந்து, 6.8.1984 அன்று பதியப்பட்ட சமரச தீர்ப்பாணையானது, மோசடியாலும் மற்றும் திரித்துரைத்தும் பெறப்பட்டதாதலால், அது சட்டப்பூர்வ சமரசமல்ல என்பது தெளிவாகிறதென வழக்காளர் வாதிட்டார். வாசுதேவா மில்லிற்காக வாங்கப்பட்ட கடனிற்காக பஞ்சாப் வங்கிக்கு வழக்காளர் தனிப்பட்ட

பொறுப்புறுதியளித்திருப்பதையடுத்து, குடும்பச் சொத்தைக் காப்பதற்காக மட்டுமே சமரசம் ஏற்படுத்தப்பட்டுள்ளதென 1-ஆம் மறுப்பாளரால் திரித்துரைக்கப்பட்டதென்பது வழக்காளரின் வழக்காகும். சமரசத்தில் கையெழுத்திடுவதன் மூலம் சமரசத்திற்காக வழக்காளர் அளித்த சம்மதமானது விருப்ப இசைவல்ல என்ற வழக்காளரின் வழக்கை வழக்குரைத் தெளிவாக நிறுவுகிறது. இவ்வாறாக, சமரசமானது வழக்காளரின் விருப்பத்தில் செல்லாததாகிறது.

48. கீழமை நீதிமன்றங்களால் தீர்ப்பளிக்கப்பட்டதுபோன்று, தற்பொழுதைய வழக்கின் பொருண்மைகளில், ஆணை XXIII, விதி 3(அ)-இன் கீழான தடை ஈர்க்கப்படுகிறதா? என்னும் வினாவானது எங்களால் பதிலளிக்கப்படவேண்டியுள்ளது. எந்த சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையானது வழங்கப்பட்டதோ, அந்த சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையை நீக்கறவு செய்வதற்கான வழக்கை விதி 3(அ) தடைசெய்கிறது. மேற்குறிப்பிட்டவாறு "சட்டப்பூர்வமான" என்ற சொல்லானது, விதி 3-இல் பயன்படுத்தப்பட்டுள்ளது மற்றும் விதி 3-இன் விளக்கத்தில் கூறுவதாவது: "1872-ஆம் ஆண்டைய இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (9/1872) கீழ் இல்லா அல்லது செல்லத்தகாத உடன்படிக்கை அல்லது சமரசமானது சட்டப்பூர்வமானதாகக் கருதப்படமுடியாது.....;"

49. **இவ்வாறாக, தெளிவாக இல்லா அல்லது செல்லத்தகாத உடன்படிக்கை அல்லது சமரசமானது சட்டப்பூர்வமானதாகக் கருதப்படமுடியாது மற்றும் எந்த சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையானது வழங்கப்பட்டதோ, அந்த சமரசமானது, இல்லா அல்லது செல்லத்தகாத சமரசமாகுமெனில், விதி 3(அ)-இன் கீழான தடையானது ஈர்க்கப்படும்.**

50. ஆணை XXIII, விதி *3* மற்றும் *3(அ)* ஆகியவை இந்நீதிமன்றத்தின் முன்பாக அனேக வழக்குகளில் பரிசீலனைக்கு வந்தன. விதி *3* மற்றும் *3(அ)* வரிசையில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின் கருத்தைக் கண்டறிய அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடவேண்டியுள்ளது. **பன்வாரி லால் -எதிர்- சந்தோ தேவி (திருமதி) வாரிசுகள் மற்றும் ஒருவர்,** *(1993) 1* **எஸ்.சி.சி.** *581.* இந்நீதிமன்றமானது விதி *3* மற்றும் விதி *3(அ)* ஆகியவற்றைப் பரிசீலித்தது. இந்நீதிமன்றம் தீர்ப்பளித்தது யாதெனில், *1976*-ஆம் ஆண்டைய திருத்தச் சட்டத்தின் நோக்கம், சமரசத்தை எதிர்துரைக்கும் தரப்பினர், அதனை பதிந்த நீதிமன்றத்தை வினவவேண்டும் என நிர்பந்திப்பதாகும். பத்திகள் *6* மற்றும் *7* ஆகியவற்றில் பின்வருவன வரையறுக்கப்பட்டன:-

> *"6.* பல சந்தர்ப்பங்களில் தரப்பினர்கள் சமரச மனுக்களைத் தாக்கல் செய்து, அதன் அடிப்படையில் தீர்ப்பாணைகள் உருவாக்கப்பட்டு, பின்னர் ஒன்று அல்லது பிற காரணங்களுக்காக அத்தகைய சமரசத்தின் செல்லுந்தன்மையை எதிர்க்கின்றனர். அத்தகைய தீர்ப்பாணைகளை நீக்கறவு செய்வதற்காக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, அவை பல நீதிமன்றங்களுக்கு மேல்முறையீடுகள் உட்பட பல்லாண்டுகளாக காலம் நீட்டிக்கப்படும் என்பது நீதிமன்றங்களின் அனுபவமாகும். நீதிமன்றங்கள் மற்றும் பொது மக்களின் இக்கட்டுநிலையைக் கருத்திற்கொண்டு, *1976*-ஆம் ஆண்டைய திருத்தச்சட்டத்தின் மூலம், ஆணை XXIII-இல் அனேகத் திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை,

உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் மூலம் வழக்கைத் திரும்பப்பெறுதல் மற்றும் சரிசெய்தல் போன்றவை தொடர்பான விதிகளைக் கொண்டுள்ளன. வழக்குத் தொடரப்பட்ட எந்நேரத்திலும், வழக்காளர் தன்னுடைய வழக்கையோ அல்லது கோரிக்கையின் ஒரு பகுதியையோ கைவிடலாம் என விதி 1 பரிந்துரைக்கிறது. விதி 1(3) கூறுவதாவது: நீதிமன்றமானது, (அ) முந்தைய குறைபாட்டால் வழக்கானது தோல்வியுறும் அல்லது (ஆ) வழக்கின் முதற்பொருளிற்காகவோ அல்லது பகுதி கோரிக்கைக்காகவோ, வழக்காளர் புதிய வழக்கைத் தாக்கல் செய்ய போதியக் காரணங்கள் இருப்பதாகத் திருப்தியுறுமிடத்து, தான் பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளின் அடிப்படையில், புதிய வழக்கைத் தாக்கல் செய்யும் சுதந்திரத்துடன் நீதிமன்றமானது வழக்காளருக்கு அனுமதி வழங்கலாம். வழக்காளர் மேற்குறிப்பிட்ட அனுமதியைப் பெறாமல், விதி 1(4)-இன் அடிப்படையில் வழக்கை கைவிடவோ அல்லது திரும்பப்பெறவோ செய்வாரானால், அவ்வழக்கின் முதற்பொருள் தொடர்பாக புதிய வழக்கைத் தாக்கல் செய்வதனின்று அவர் விலக்கப்படவேண்டும். வழக்கு சமரசம் தொடர்பான நடைமுறையைக் கொண்டுள்ள ஆணை XXIII, விதி 3-ங்கூட சமரச வழக்கை எதிர்த்துரைக்கையில், அர்ப்ப மற்றும் சோர்வுறச்செய்யும் வழக்கைத் தடைசெய்யும் வகையில்

திருத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தினால் சமரசமானது பதியப்படும் முன்னர், உடன்படிக்கையானது சட்டப்பூர்வமானதாக இருக்க வேண்டும். சமரசமானது, எழுத்து வடிவிலிருந்து அது தரப்பினர்களால் கையெழுத்திடப்படவேண்டும் என்பது உட்பட சில நிபந்தனைகள் மட்டுமன்றி, விதி 3-இல் விளக்கத்துடன்கூடிய வாசகமும் சேர்க்கப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:

> "சரிசெய்தல் அல்லது மன நிறைவுறுதல் ஏற்படுத்தப்பட்டதென ஒரு தரப்பினரால் கூறப்படும். அது மறுதரப்பினரால் மறுக்கப்படும்பொழுது, அதனை நீதிமன்றம் முடிவுசெய்யவேண்டும். ஆனால், பதியப்படும் காரணங்களுக்காக வாய்தா வழங்கப்-படுவது பொருத்தமென நீதிமன்றம் கருதினாலன்றி, அவ்வினாவை முடிவுசெய்யும் நோக்கிற்காக வழக்கானது ஒத்திவைக்கப்படக்கூடாது.
>
> விளக்கம்.- 1872-ஆம் ஆண்டைய (9/1872) ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் இல்லா அல்லது செல்லத்தகாத உடன்படிக்கை அல்லது சமரசமானது, இவ்விதியில் சட்டப்பூர்வமானதாகக் கருதப்படமுடியாது."

7. விளக்கத்துடன் வாசகத்தை சேர்ப்பதன் மூலம், சமரசத்தை எதிர்த்துரைக்கும் தரப்பினர், வினாவிற்கிடமான சமரசத்தைப் பதிந்துள்ள நீதிமன்றத்தின் முன்பே, அந்த சமரசத்தை வினவ

நிர்பந்திப்பதே திருத்தச்சட்டத்தின் நோக்கமென தோன்றுகிறது. தரப்பினர்கள் சரிசெய்தலை சட்டப்பூர்வ முறையில் செய்துள்ளனரா? என்ற முரண்பாட்டை நீதிமன்றம் முடிவு செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் இல்லா அல்லது செல்லத்தகாத உடன்படிக்கை அல்லது சமரசமானது, மேற்படி விதியில் சட்டப்பூர்வமானதல்ல என விளக்கம் தெளிவுப்படுத்தியது. பல வழக்குகள் மற்றும் வழக்கை நீட்டித்தல் ஆகியவற்றை தவிர்க்கும்பொருட்டு விதியில் விளக்கத்துடன் வாசகத்தை அறிமுகப்படுத்தி, பின்வருவனவற்றைக் கூறி, சமரசத்தின் அடிப்படையிலானத் தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய தனிப்பட்ட வழக்கைத் தாக்கல் செய்வதை விதி 3(அ) குறிப்பிட்ட தடைசெய்கிறது:

> "3(அ). வழக்கிற்குத் தடை.- எந்த சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணை வழங்கப்பட்டதோ, அந்த சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில் வழக்கேதும் தாக்கல் செய்யப்படக்கூடாது."

51. குறிப்பிடப்படவேண்டிய அடுத்த தீர்ப்புரையானது, **புஷ்பா தேவி பகத் (இறந்தவர்) வாரிசு மூலமாக (திருமதி) சாத்னா ராய் -எதிர்- இராஜேந்தர் சிங் மற்றும் பலர், (2006) 5 எஸ்.சி.சி. 566** இவ்வழக்கில் நீதிமன்றத்திற்காக கருத்துரைத்த மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.வி. இரவீந்தரன், ஆணை XXIII, விதி 3 மற்றும்

3(அ)-இன் வாசகங்களை பத்தி *17*-இல் பின்வரும் சொற்களில் தன்னுடைய முடிவுரையாக பதிந்துள்ளார்:-

> *"17.* ஆணை *23*-இன் திருத்தப்பட்ட வாசகங்களிலிருந்து தோன்றும் வாசகமானது இவ்வாறாக தொகுக்கப்படமுடியும்:
>
> (i) உ.வி.மு.ச., பிரிவு *96(3)*-இல் கொண்டுள்ள குறிப்பிட்ட தடைத் தொடர்பாக சம்மதித்த தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீடு ஏதும் நிலைக்கத்தக்கதல்ல.
>
> (ii) ஆணை *43*, விதி *1*-இன் உட்பிரிவு *(எம்)*-இன் நீக்கத்தையடுத்து, சமரசத்தைப் பதியும் *(*அல்லது பதிய மறுக்கும*)* நீதிமன்றத்தின் உத்தரவிற்கெதிராக மேல்முறையீடு ஏதும் நிலைக்கத்தக்கதல்ல.
>
> (iii) விதி *3(அ)*-இல் கொண்டுள்ள தடையின் அடிப்படையில், சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில் சமரச தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய தனிப்பட்ட வழக்கேதும் தாக்கல் செய்யப்படமுடியாது.
>
> (iv) சம்மதிக்கப்பட்ட தீர்ப்பாணையானது, அதனைப் பிறப்பித்த நீதிமன்றத்தில் ஆணை *23*, விதி *3*-இன் கீழான விண்ணப்பத்தின் அடிப்படையில் நீக்கறவு செய்யப்பட்டாலன்றி, அந்த சம்மதிக்கப்பட்ட

தீர்ப்பாணையானது முரண்தடையாகவும், செல்லத்-தக்கதாகவும் மற்றும் கட்டுப்படுத்துவதாகவும் செயல்படுகிறது.

எனவே, சம்மதிக்கப்பட்ட தீர்ப்பாணையின் தரப்பினர் அத்தகைய சம்மதிக்கப்பட்ட தீர்ப்பாணையைத் தவிர்ப்பதற்கான ஒரே பரிகாரமானது, சமரசத்தைப் பதிந்து, அதன் வாசகங்களுக்கிணங்க தீர்ப்பாணையைப் பிறப்பித்த நீதிமன்றத்தை அணுகி, அங்கு சமரசம் ஏதுமில்லை என்பதை நிறுவுவதாகும். அந்நிகழ்வில் சமரசத்தைப் பதிந்த நீதிமன்றமே சட்டப்பூர்வ சமரசமிருந்ததா? அல்லது இல்லையா? என்பது குறித்த வினாவைப் பரிசீலித்து முடிவுசெய்யும். இது ஏனெனில், ஒரு சம்மதிக்கப்பட்ட தீர்ப்பாணையானது, நீதிமன்றத்தின் அங்கீகார முத்திரையுடன் மேல்நிலையில் வைக்கப்பட்ட தரப்பினர்களுக்கிடையிலான ஒப்பந்தமாகும். சம்மதிக்கப்பட்ட தீர்ப்பாணையின் செல்லுந்தன்மையானது, அது எந்த உடன்படிக்கை அல்லது சமரசத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்டதோ, அவ்வுடன்படிக்கை அல்லது சமரசத்தின் செல்லுந்தன்மையையே முற்றிலும் சார்ந்துள்ளது. தொடர்புடைய சமரச தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கும் 2-ஆம் மறுப்பாளர், சட்டத்திற்கிணங்க செல்லத்தக்க சமரசமில்லை என குற்றஞ்சாட்டி, தொடர்புடைய சமரசத்தை நீக்கறவு செய்வதற்காக 21.8.2001 அன்று விண்ணப்பம் தாக்கல் செய்ததால்,

அவர் இந்நிலைப்பாட்டை முற்றிலும் அறிந்தவராவார். முதன்மைத்துவமாக, தொடர்புடைய தீர்ப்பாணையை வேறெந்த மறுப்பாளரும் எதிர்த்துரைக்கவில்லை. அவர் நன்கறிந்தக் காரணத்திற்காக, 2-ஆம் மறுப்பாளர் சில நாட்களிலேயே (அதாவது 27.8.2001 அன்று) மேல்முறையிட்டு, தொடர்புடைய தீர்ப்பாணையைப் பிறப்பித்த நீதிமன்றத்தின் முன்பாகத் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தைத் தொடரவேண்டாம் என முடிவுசெய்தார். 2-ஆம் மறுப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட அத்தகைய மேல்முறையீடானது, பிரிவு 96(3)-இல் கொண்டுள்ள வெளிப்படையான தடைத் தொடர்பானதால், அது நிலைக்கத்தக்கதல்ல."

52. அடுத்த தீர்ப்புரையானது, **ஆர். இராஜண்ணா -எதிர்- எஸ்.ஆர்.வெங்கடசாமி மற்றும் பலர், (2014) 15 எஸ்.சி.சி. 471**-இல் ஆணை XXIII, விதி 3 மற்றும் 3(அ) ஆகியவற்றின் வாசகங்கள் மீண்டும் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி வாசகங்களை எடுத்துத்தந்த பின்னர், பின்வருமாறு இந்நீதிமன்றத்தினால் பத்தி 11-இல் தீர்ப்பளிக்கப்பட்டது:-

"11. மேற்படி வாசகங்களை வெறுமனே படிப்பதிலேயே, ஆணை XXIII, விதி 3-இன்படி எழுத்து வடிவமாக்கப்பட்டு, தரப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட சட்டப்பூர்வ உடன்படிக்கை அல்லது சமரசத்தின் மூலம் ஏதேனும் வழக்கானது சரிசெய்யப்பட்டது அல்லது மனநிறைவுறப்பட்டதை ஒரு தரப்பினர் கூறி, அதனை

மறுதரப்பினர் மறுக்கும்பொழுது, எந்நீதிமன்றத்தின் முன்பாக அவ்வினாவானது எழுப்பப்படுகிறதோ அந்நீதிமன்றமே அதனை முடிவுசெய்யவேண்டும். முதன்மைத்துவமானது யாதெனில், ஆணை XXIII, விதி 3-இன் விளக்கத்தில் ஒரு உடன்படிக்கையோ அல்லது சமரசமோ 1872-ஆம் ஆண்டைய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் இல்லா அல்லது செல்லத்தகாததெனில், அது மேற்படி விதியின் பொருளில் சட்டப்பூர்வமானதாக கருதப்படமுடியாது. பின்வருவது யாதெனில், எழுத்துவடிவிலான சட்டப்பூர்வ உடன்படிக்கை அல்லது சமரசமிருந்து தரப்பினர்களால் கையெழுத்திடப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்னும் வினாவானது, ஒவ்வொரு வழக்கிலும் எழுமிடத்து, உடன்படிக்கை அல்லது சமரசமானது சட்டப்பூர்வமானதா? அல்லது இல்லையா? என்னும் வினாவானது தொடர்புடைய நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படவேண்டியுள்ளது. மீண்டும் எது சட்டப்பூர்வமானது என்பது குற்றச்சாட்டானது சமரசத்தில் ஏதேனும் குறைபாட்டை தெரிவிக்கிறதா? அதனால் அதனைச்சார்ந்து வழங்கப்பட்ட தீர்ப்பாணையானது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் இல்லா அல்லது செல்லத்தகாததாகிறதா? என்பதையே சார்ந்துள்ளது. மிக முதன்மையாக எந்த சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையானது பிறப்பிக்கப்பட்டதோ, அந்த சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையை நீக்கறவு செய்வதற்கான வழக்கை,

ஆணை XXIII, விதி *3(அ)* தெளிவாகத் தடைசெய்கிறது. உடன்படிக்கை அல்லது சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணை வழங்கிய நீதிமன்றத்தின் முன்பாக அத்தகைய உடன்படிக்கை அல்லது சமரசத்தின் சட்டப்பூர்வத் தன்மையைக் குறித்து உடனடியாக வினா ஏதும் எழுப்பப்படுவதில்லை என்பதை இது மறைமுகமாகக் குறிக்கிறது. அந்த நீதிமன்றம் மட்டுமே அவ்வினாவை ஆய்வுசெய்து தீர்மானிக்கமுடியும். அம்முதற்பொருள் மீது தனிப்பட்ட வழக்கைத் தாக்கல் செய்ய நீதிமன்றம் பணிக்கமுடியாது மற்றும் உ.வி.மு.ச., ஆணை XXIII, விதி *3(அ)*-இன் வாசகங்களின்படி, அத்தகைய வழக்கேதும் தாக்கல் செய்யமுடியாது. அதுதான் கையிலுள்ள வழக்கில் தெளிவாக நடந்துள்ளது. சமரச தீர்ப்பாணையை எதிர்த்து, வழக்காளர் மு.வ. எண் *5326/2005*-ஐ தாக்கல் செய்தபொழுது, அத்தகைய வழக்கானது, ஆணை XXIII, விதி *3(அ)*-ஆல் தடைசெய்யப்படுகிறதெனக் கூறி எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் வழக்கை விசாரித்த நீதிமன்றமானது, உ.வி.மு.ச., ஆணை VII, விதி *11*-இன் கீழ் வழக்குரையை நிராகரித்தது. இவ்வாறாக வழக்குரையானது நிராகரிக்கப்பெற்று, மறுப்பாளர்கள் *(எதிர்மனுதாரர்கள்)* வாதிட்டதாவது, இங்குள்ள வழக்காளர் *(மேல்முறையீட்டாளர்)* மு.வ. எண் *5326/2005*-ஐ தொடர்ந்து சமரச தீர்ப்பாணைக்கெதிராக

பரிகாரம் தேடவேண்டும். அவ்வழக்கின் வழக்குரையானது நிராகரிக்கப்பட்டதெனில், அந்நிராகரிப்பிற்கெதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிகாரம் தேடவேண்டும் என வாதிடக்கேட்டோம்."

53. **(மேற்படி) புஷ்பா தேவி** மற்றும் **(மேற்படி) பன்வாரி லால்** ஆகிய வழக்குகளின் தீர்ப்புரைகள் இந்நீதிமன்றத்தினால் பார்வையிடப்பட்டு, சார்ந்து நிற்கப்பட்டுள்ளன. உடன்படிக்கை அல்லது சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையை வழங்கிய நீதிமன்றத்தின் முன்பாக அத்தகைய உடன்படிக்கை அல்லது சமரசத்தின் சட்டப்பூர்வத் தன்மை தொடர்பான வினாவானது உடனடியாக எழுப்பப்படுவதில்லை. அந்த நீதிமன்றம் மட்டும்தான், அவ்வினாவை ஆய்வுசெய்து தீர்மானிக்கமுடியும்.

54. பிந்தைய தீர்ப்புரையை **திரிலோகி நாத் சிங் -எதிர்- அனிருத் சிங் (இறந்துவிட்டார்) வாரிசுகள் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டார் மற்றும் பலர்,** *(2020) 6* **எஸ்.சி.சி.** *629* என்ற வழக்கில் இந்நீதிமன்றமானது மீண்டும் முந்தைய தீர்ப்புரைகளைச் சுட்டி, அதே கொள்கைகளை வலியுறுத்தியது, அதாவது, தொடர்புடைய தீர்ப்பாணையின் தரப்பினர், அத்தகைய தொடர்புடைய தீர்ப்பாணையைத் தவிர்ப்பதற்கான ஒரே பரிகாரமானது அந்த சமரசத்தைப் பதிந்த நீதிமன்றத்தை அணுகுவதாகும் மற்றும் தனிப்பட்ட வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல. பத்திகள் *17* மற்றும் *18* ஆகியவற்றில் பின்வருவன வரையறுக்கப்பட்டுள்ளன:-

"17. 1976-ஆம் ஆண்டைய திருத்தத்தின் மூலம் உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தில் 1.2.1977 முதல் திருத்தத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம், சட்டமானது, ஆணை XXIII, விதி 3(அ)-ஐ நடைமுறைப்படுத்தியுள்ளது. அது, எந்த சமரசத்தின்

அடிப்படையில் தீர்ப்பாணையானது வழங்கப்பட்டதோ, அந்த சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில், தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய ஒரு வழக்கு தாக்கல் செய்வதைத் தடைசெய்கிறது. தரப்பினர்களுக்கிடையில் சமரசத்தை ஏற்படுத்துவதன் நோக்கம் தகுந்த சட்டவரம்புடைய நீதிமன்றத்தின் முன்பாக நிலுவையிலுள்ள பல்வேறு தகராறுகளை ஒட்டுமொத்தமாக முற்றுப்புள்ளி வைப்பதாகும்.

18. முடிவின் இறுதியே, அனைத்து நீதி வழங்கும் அமைப்புகளின் முதன்மையானக் கோட்பாடாகும். இவ்வாறாக, தரப்பினர்களுக்கிடையிலான சமரசத்தின் அடிப்படையானது, மேலும் வழக்கை உருவாக்குவதாக இருக்கக்கூடாது. உ.வி.மு.ச., ஆணை 23, விதி 3(அ) எந்த சமரசத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையானது வழங்கப்பட்டதோ, அந்த சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில் தீர்ப்பாணையை நீக்கறவு செய்ய ஒரு வழக்கு தாக்கல் செய்வதைத் தடைசெய்கிறது. ஆணை 23, விதி 3-இன் திட்டமானது, வழக்கானது பல்கிப் பெருகுவதைத் தடுப்பதும் மற்றும் தரப்பினர்கள் தன்னிச்சையாக அமைதியான முறையில் சட்டப்பூர்வ எழுத்துவடிவிலான சமரசத்தையெட்ட அனுமதிப்பது ஆகும். ஒப்புக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையானது, இறுதியை எட்டுவதற்கு நீதிமன்றம் ஒரு சாதகமாக விளங்கமுடியும். உ.வி.மு.ச., ஆணை 23, விதி 3-இன் கீழான விண்ணப்பமானது,

நீதிமன்றத்தின் முன்பாக வினவப்படுவது சாத்தியம் என்பதால், நீதிமன்றமானது, விரும்பா தரப்பினர்கள் மீது சமரசத்தை விதிக்கும் தரப்பினராக ஒருபொழுதும் இருக்காது."

55. சமரசத்தின் அடிப்படையிலான இசைவுத் தீர்ப்பாணையின் தரப்பினர், தீர்ப்பாணையானது சட்டப்பூர்வமானதல்ல என்ற காரணத்தின் அடிப்படையில் சமரச தீர்ப்பாணையை எதிர்ப்பவர், எ.கா., அது இல்லா அல்லது செல்லத்தகாதது என எதிர்த்துரைப்பவர்கள் சமரசத்தை அதே நீதிமன்றத்தையே அணுகவேண்டியுள்ளது மற்றும் இசைவுத் தீர்ப்பாணையை எதிர்த்துரைக்கும் தனிப்பட்ட வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளன என்னும் தெளிவான தீர்ப்புரையை மேற்படி தீர்ப்புரைகள் கொண்டுள்ளன. "மு.வ. எண் 37/1984-இல் வழங்கப்பட்ட தீர்ப்புரையானது போலியானது மற்றும் பெயரளவிலானது, சட்டத்திற்கப்பாற்பட்டது, கூட்டு சூழ்ச்சியானது, நிலைநிறுத்தத்தகாதது, செல்லாதது, செயல்படுத்தமுடியாதது மற்றும் வழக்காளர்களைக் கட்டுப்படுத்தாதது" என அறிவிக்கும் விளம்புகையை, மு.வ. எண் 1101/1987-இல் வழக்காளர் வேண்டினார். மேற்சொன்ன பத்திகளில் இசைவுத் தீர்ப்பாணையை எதிர்ப்பதற்காக வழக்குரையில் கொண்டுள்ள காரணங்களை நாங்கள் கவனித்துள்ளோம். அதிலிருந்து 6.8.1984 அன்று பதியப்பட்ட சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல எனக் கோரப்பட்டுள்ளது தெளிவாகிறது. எ.கா., இல்லாதது அல்லது செல்லாதது என கோரப்பட்டுள்ளது. மு.வ. எண் 1101/1987 வழக்கில் வழக்காளரால் மேற்கொள்ளப்பட்ட காரணத்தின் அடிப்படையில், வழக்காளருக்கு கிடைக்கக்கூடிய பரிகாரமானது, அதே வழக்கில் அதே நீதிமன்றத்தை அணுகி, சமரசமானது சட்டப்பூர்வமானதல்ல என திருப்தியுறச் செய்வதாகும். சட்டமானது, வழக்குகள் பல்கிப்பெருகுவதை நிறுத்த எண்ணி, சமரச தீர்ப்பாணையை

எதிர்த்துரைப்பதைத் தடைசெய்யவே திருத்தச் சட்டத்தின் மூலம் விதி 3(அ) சேர்க்கப்பட்டது. நாங்கள் இவ்வாறாக "மு.வ. எண். 1101/1987-ஆனது ஆணை XXIII, விதி 3(அ)-வினால் தடை செய்யப்படுகிறதென முடிவு செய்த விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புரைகளில் குறையேதும் காணவில்லை.

56. மு.வ. எண் 1101/1987-ஆனது ஆணை XXIII, விதி 3(அ)-வினால் தடைசெய்யப்படுவதை நாங்கள் அறிந்து, 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையை வினவுவதற்காக வழக்குரையில் வைக்கப்பட்ட காரணங்களின் சரித்தன்மையைக் குறித்து பதிவது எங்களுக்குத் தேவையற்றதாகும். 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையானது, மு.வ. எண் 1101/1987-இல் வினவப்பட்டிருக்க முடியாது.

57. பரிசீலிக்கப்பட இன்னும் ஒரு வாதம் எஞ்சியுள்ளது.

58. 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட தொடர்புடைய தீர்ப்பாணையானது எதிர்த்துரைக்கப்பட்டிருக்க முடியாதெனினும், 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட தொடர்புடைய தீர்ப்பாணையில் கோயமுத்தூர், அழகப்பா செட்டியார் சாலை, தடாபத்திலுள்ள வீட்டுக் கட்டிடமானது விடப்பட்டதென்றும், மேற்படி வழக்குச் சொத்தான வீடானது, மு.வ. எண் 37/1984 வழக்கின் ஒரு பகுதியல்ல என்றும், 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையிலும் அது இல்லை என்றும், மேல்முறையீட்டாளர்களின் மேல்முறையீட்டுரையின்படி, வழக்குச் சொத்தானது 1-ஆம் மறுப்பாளரின் பெயரிலுள்ளபொழுதிலும் அது கூட்டுக் குடும்ப நிதியிலிருந்து வாங்கப்பட்டது என்றும், அதில் மேல்முறையீட்டாளர்களுக்கு பங்குள்ளது என்றும் மேல்முறையீட்டாளர்களின் வழக்குரைஞர் வாதிடுகின்றார்.

59. கோயமுத்தூர், டாக்டர் அழகப்பா செட்டியார் சாலை, தடாபத்திலுள்ள வீட்டுக் கட்டிடமானது, 'ஆ' அட்டவணைச் சொத்துகளில் 10-ஆம் சொத்தாக பின்வரும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது:

"வரிசை எண் X

கோயமுத்தூர் பதிவு அலுவலகம், கோயமுத்தூர் மாநகராட்சி, தடாபத், டாக்டர் அழகப்பா செட்டியார் சாலை, கதவு எண் 101, பரப்பளவு 0.33 ஏக்கர், 4500 சதுர அடி, கட்டப்பட்ட குடியிருப்பு கட்டிடம்."

60. மேற்படி குடியிருப்புச் சொத்தானது, மு.வ. எண் 37/1984 வழக்கிலோ அல்லது 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையின் ஒரு பகுதியாகவோ சேர்க்கப்படவில்லை. மு.வ. எண் 37/1984-இல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையானது செயல்படுத்தத்தகாதது என அறிவிக்கக்கோரும் வழக்காளரின் வேண்டுரையானது, தீர்ப்புரையின் பகுதியல்லாத சொத்தின் பரிசீலனையைத் தடைசெய்யாது. கோயமுத்தூர், தடாபத், டாக்டர் அழகப்பா செட்டியார் சாலையில் உள்ள குடியிருப்புச் சொத்தில் பங்கு கோருவதற்கான மேல்முறையீட்டாளர்களின் வழக்கானது, இவ்வாறாக இம்மேல்முறையீடுகளில் பரிசீலிக்கப்படவேண்டியுள்ளது.

61. மு.வ. எண் 1101/1987 என்ற வழக்கில் மேற்குறிப்பிட்ட சொத்துத் தொடர்பாக வழக்காளர் மற்றும் 1-ஆம் மறுப்பாளர் ஆகியோரின் கூற்றுகள் தொடர்பாக முதலில் நாம் கவனிப்போம்.

62. வழக்குரையின் பத்தி 6(உ)-இல் வழக்காளரால் பின்வருவன வழக்குரைக்கப்பட்டுள்ளன:

"6(உ) 1978-ஆம் ஆண்டில் கோயமுத்தூர் தடாபத்தில் ஒரு மாளிகை பங்களா வாங்கப்பட்டது. அது 'ஆ' அட்டவணையில் வரிசை எண் 10-ஆம் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சொத்தானது, கூட்டுக் குடும்ப வருவாயிலிருந்து குடும்ப ஆதாயத்திற்காக வாங்கப்பட்டது."

63. மு.வ. எண் 1101/1987-இல் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்கள், மேற்படி பத்தி 6(உ)-இன் விவரங்கள் குறித்த எழுத்துவடிவிலான பதிலுரையைத் தாக்கல் செய்தனர். அதில், பின்வருவன 1-ஆம் மறுப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளன:

"6. வழக்குரையின் பத்தி 6-இன் குற்றச்சாட்டுகள் முற்றிலும் உண்மையானவையல்ல. 'ஆ' அட்டவணையில் 10-ஆம் வரிசை எண்ணிடப்பட்ட சொத்தானது, கூட்டுக் குடும்ப வருவாயிலிருந்து குடும்ப ஆதாயத்திற்காக வாங்கப்பட்டது என்னும் குற்றச்சாட்டானது முற்றிலும் பொய்யானதாகும். முதற்கண், கூட்டு வருவாயே இல்லை. இரண்டாவதாக, குடும்பமே இல்லை. மூன்றாவதாக, அது கூட்டுக் குடும்ப வருவாயில் வாங்கப்படவில்லை. சொத்தானது, 1-ஆம் மறுப்பாளரால் ஏலத்தில் வாங்கப்பட்டது. விலையைச் செலுத்துவதற்குத் தேவையானத் தொகையானது, ஸ்வாமி & ஸ்வாமி & கோ நிறுவனத்திலிருந்து, 1-ஆம் மறுப்பாளரால் வாங்கப்பட்டது. தொகையானது அவருக்காக, ஸ்வாமி & கோ நிறுவனத்திலிருந்து செலுத்தப்பட்டது."

64. 1-ஆம் மறுப்பாளரின் வழக்கு யாதெனில், மேற்படி சொத்தானது ஏலத்தில் 1-ஆம் மறுப்பாளரால் வாங்கப்பட்டது என்பதாகும். வீட்டுச் சொத்தானது, 1-ஆம் மறுப்பாளரின் தனிப்பட்ட சொத்து என்னும் அவருடைய கோரிக்கைக்கு ஆதரவாக அவர் ம.சா.ஆ.27-ஐ தாக்கல் செய்துள்ளார். 28.11.1979 அன்று நடத்தப்பட்ட பொது ஏலத்தில், சொத்தை ரூ.1,51,000/-க்கு 1-ஆம் மறுப்பாளர் வாங்கினார் என ம.சா.ஆ.27 தெரிவிக்கிறது. ம.சா.ஆ.27 கோயமுத்தூர் சார்பு நீதிமன்றத்தின் நீதிபதியால் வழங்கப்பட்ட மேற்படி விவரத்துடன் கூடிய கிரையச்சான்றாகும். எழுத்துவடிவ பதிலுரையின் பத்தி 6-இல் விலையைச் செலுத்துவதற்கானத் தொகையானது, ஸ்வாமி & ஸ்வாமி & கோ-விடமிருந்து 1-ஆம் மறுப்பாளரால் பெறப்பட்டதென கூறியிருந்தாலும், அவர் சாட்சிக் கூண்டில் ம.சா.2-ஆக முன்னிலையாகி, தடாபத் வீட்டை வாங்குவதற்கு அவர் ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் கோ நிதியினைப் பயன்படுத்திக் கொண்டதாகத் தன்னுடைய குறுக்கு விசாரணையில் கூறினார். தன்னுடைய குறுக்கு விசாரணையில் ரூ.1,50,000/-ஐ பெற்றதாக ஒப்புக்கொண்டு, அவர் பின்வருமாறு கூறினார்:

> "வீட்டை வாங்குவதற்காக நிறுவனத்தின் நிதி பயன்படுத்தப்பட்டது என்பது சரியல்ல. எந்தக் கூட்டாண்மை அல்லது கணக்கிலிருந்து தொகையானது பெறப்பட்டது என்பதைக் காண்பிக்க ஆவணங்கள் ஏதுமில்லை மற்றும் எனக்கு நினைவில்லை. நான் கூட்டுக் குடும்ப நிதியை எடுத்து வாங்கினேன் என்று சொன்னால், அது சரியல்ல. நான் ரூ.1.50 இலட்சம் எடுத்திருப்பேன். அது திரும்ப

செலுத்தப்படவில்லை. தற்பொழுது ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட முடியாது."

65. பிந்தைய குறுக்கு விசாரணையில், தடாபத்தில் உள்ள வீட்டை வாங்கவதற்காக ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் கோ-விடமிருந்து பெற்ற தொகையைத் திரும்பச் செலுத்தவில்லை என்பதை அவர் தெளிவாகக் குறிப்பிட்டார். 12.8.1997 அன்றைய அவருடைய குறுக்கு விசாரணையில் 2-ஆம் மறுப்பாளர் கூறுவது:

"12.8.1997 அன்று மறுப்பாளர் சத்தியம் செய்யவைக்கப்பட்டு, மறுவிசாரணை செய்யப்பட்டார்.

தடாபத்தில் உள்ள வீட்டை வாங்குவதற்காக கடன்பெற்ற தொகையை ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் நிறுவனத்திற்கு திரும்பச் செலுத்தாமைக்குக் காரணம், மேற்படி நிறுமத்தில் என்னுடைய பெயரில் பற்றுத்தொகை நிலுவையிருந்தது."

66. ஆவணத்திலுள்ள சான்றானது, இவ்வாறாக, தடாபத்தில் உள்ள வீடானது 1-ஆம் மறுப்பாளரின் பெயரில் வாங்கப்பட்டதென்றும், வாங்குவதற்கான மறுபயன் தொகையானது, அனைத்துக் குடும்பத்தினர்களையும், இயக்குநர்களாகவும் மற்றும் பங்குதாரர்களாகவும் கொண்டுள்ள ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் & கோ நிறுமத்திலிருந்து செலுத்தப்பட்டதென்றும் தெரிவிக்கிறது. 2-ஆம் மறுப்பாளர் தன்னுடைய குறுக்கு விசாரணையில் கூறியதாவது:

"நாங்கள் 1974-ஆம் ஆண்டில் ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் நிறுவனத்தைத் துவங்கினோம். அதில் அனைத்து மூன்று குடும்ப உறுப்பினர்களும் பங்குதாரர்களாவர்."

67. குன்னூரில் உள்ள ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தின் பங்குதாரர்களின் விவரங்கள் மு.வ. எண் 37/1984 என்ற வழக்கின் 'இ' அட்டவணையில் 10-ஆம் சொத்து விவரமாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"வரிசை எண் 10

தி/ள். ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் (பி) லிமிடெட்-இன் வரையறுக்கப்பட்ட விவரங்கள்:

வரிசை எண்	பெயர்	பங்குகள்		பண மதிப்பு
1.	எஸ்.கே. குமாரசாமி	920	ரூ.	92,000.00
2.	எஸ்.கே. சின்னசாமி	440	ரூ.	44,000.00
3.	எஸ்.ஆர். சண்முகவேலாயுதம்	410	ரூ.	41,000.00
4.	எஸ்.ஆர். சோமசுந்தரம்	230	ரூ.	23,000.00
5.	திருமதி ஆர். ஜானகியம்மாள்	810	ரூ.	81,000.00
6.	திருமதி எஸ். சரஸ்வதி	750	ரூ.	75,000.00
7.	சி. கமலம்	610	ரூ.	61,000.00
8.	திருமதி. சி. சத்தியவதி	75	ரூ.	7,500.00
	மொத்தம்	4245	ரூ.	4,24,500.00"

68. மேலே தரப்பட்ட விவரங்களின்படி 4245 பங்குகளில் ரங்கசாமி குடும்பத்தினர் 2190 பங்குகளைக் கொண்டிருந்தனர். அது நிறுவனத்தின் பங்குகளில் 50%-க்கும் கூடுதலாகும்.

69. 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பிலான வெற்று வாதம் யாதெனில், *7.11.1960* அன்றைய பாகப்பிரிவினைக்குப் பின்னர், மூன்று குடும்பங்களும் பிரிந்துவிட்டன. கூட்டுக் குடும்பத் தகுதியானது முடிவிற்கு வந்துவிட்டது என்பதாகும். *7.11.1960*-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையானது பதியப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமாகும். அது, விசாரணை நீதிமன்றத்தினால் தன்னுடைய தீர்ப்புரையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என அவர் வாதிடுகின்றார். மூன்று குடும்பத்தினரின் பாகப்பிரிவினையானது *7.11.1960* அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, *1979*-ஆம் ஆண்டில் தடாபத் வீடானது வாங்கப்படும்பொழுது கூட்டுக் குடும்பம் இல்லை என்பது அவருடைய வாதமாகும்.

70. மேல்முறையீடுகளுக்காதரவாக, மேல்முறையீட்டாளர்களின் கற்றறிந்த வழக்குரைஞரின் வாதம் யாதெனில், நிலச் சொத்தை நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து காப்பாற்றவே, *7.11.1960*-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையானது மூன்று சகோதரர்களுக்கிடையில் நிகழ்த்தப்பட்டது என்பதாகும். *7.11.1960*-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமானது *7.11.1960* அன்று பதியப்பெற்றது. *1.4.1960*-ஆம் தேதிக்குப் பின்னர், நில உச்சவரம்புச் சட்டமானது நடைமுறைப் படுத்தப்பட்டதால் *1.4.1960* அன்று தரப்பினர்கள் அசையாச் சொத்துகளைப் பிரித்துக்கொண்டதாக பாகப்பிரிவினை ஆவணம் கூறுகிறது. *1.4.1960*-ஆம் தேதிக்குப் பின்னர் உடனடியாக நில உச்சவரம்புச் சட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டதால், மேற்படி விவரமானது மேற்படி பிரிவினை ஆவணத்தில் ஏற்படுத்தப்பட்டது. மூன்று குடும்பத்தினர்களின் சொத்துகளையும் காப்பாற்றவே பாகப்பிரிவினை ஆவணமானது நிறைவேற்றப்பட்டது. மூன்று குடும்பத்தையும் பிரித்து, கூட்டுக் குடும்ப நிலையில் மாற்றமேதும் கொண்டுவரும் நோக்கமேதும் இல்லை என்பது வாதமாகும். திரு. கிரியால் உயர் நீதிமன்றத்தின் முன்பாக வைக்கப்பட்ட அதே வாதமானது மீண்டும்

வைக்கப்பட்டுள்ளது. அது, 7.11.1960 பாகப்பிரிவினைக்குப் பின்னரும், மூன்று சகோதரர்களும் ஒன்றிணைந்து கூட்டுக் குடும்பமாக தொடர்ந்தனர். அது பல்வேறு சொத்துகள் அனைத்துக் குடும்பத்தினரின் பெயரிலும் வாங்கப்பட்டது. சதபாலயத்தில் மூதாதையர் வீட்டிலும் மற்றும் சோமனூரில் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டிலும் சேர்ந்து வசித்தது ஆகியவற்றிலிருந்து சான்றாகிறது. 1963-ஆம் ஆண்டில் நிலம் வாங்கப்பட்ட பின்னர், அனைத்து மூன்று குடும்பத்தினரும் கூட்டாக வணிகம் செய்துவந்தனர் என்பதாகும்.

71. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர் மேலும் வாதிடுவதாவது, 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை உடன்படிக்கையானது தரப்பினர்களுக்கிடையில் ஏற்பட்டதும், அதில் வாசுதேவா துணி ஆலையை எடுத்துக்கொள்ள ரங்கசாமி குடும்பத்தினர் ஒப்புக்கொண்டதும், குன்னூர் வேடபதி கிராமத்தில் உள்ள சொத்தை எடுத்துக்கொள்ள 1-ஆம் மறுப்பாளர் எஸ்.கே. குமாரசாமி முடிவு செய்ததும் மற்றும் சின்னசாமி குடும்பத்தினர் சோமனூரில் உள்ள சொத்தை எடுத்துக்கொள்ள முடிவு செய்ததும், 1-ஆம் மறுப்பாளரின் தனிப்பட்ட வழக்காகும். 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை உடன்படிக்கையின்படி பாகப்பிரிவினையை சமன்செய்வதற்காக வழக்காளர், 4-ஆம் மறுப்பாளருக்கு ரூ.7 இலட்சம் தரவேண்டும் என்றும், 1-ஆம் மறுப்பாளர் 4-ஆம் மறுப்பாளருக்கு ரூ.4 இலட்சம் தரவேண்டும் என்றும் ஒப்புக்கொண்டதாக 1-ஆம் மறுப்பாளர் வாதிட்டுள்ளார். ம.சா.1, "8.3.1981 அன்று பாகப்பிரிவினை நிகழ்ந்தது, மேற்படி உடன்படிக்கையை செயல்படுத்துதல்தான் சமரச தீர்ப்பாணை" என்னும் வழக்குடன் வந்துள்ளார் என திரு. கிரி வாதிடுகின்றார். 1981-ஆம் ஆண்டைய பாகப்பிரிவினையைக் குறித்து 1-ஆம் மறுப்பாளரே கூறும்பொழுது, அப்பாகப்பிரிவினையானது முன்பு கூட்டுக் குடும்பம் இருந்ததாக கருதுகிறது மற்றும்

7.11.1960 முதல் மூன்று குடும்பங்களும் பிரிந்திருந்தால், மீண்டும் 1981-ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை ஏற்பட இடமில்லை என திரு. கிரி வாதிடுகின்றார்.

72. எங்கள் முன்பு பரிசீலனைக்குள்ள கருத்துகளுள் ஒன்று, தடாபத்திலுள்ள வீடானது 1-ஆம் மறுப்பாளரால் வாங்கப்பட்டபொழுது, அனைத்து மூன்று குடும்பத்தினரும் கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினராக விளங்கினரா? அல்லது 7.11.1960-க்கு பின்னர் அனைத்து மூன்று குடும்பத்தினரும் பிரிந்து தனிக் குடும்பமாகத் தொடர்ந்தனரா? என்பதாகும்.

73. 1-ஆம் மறுப்பாளரின் நிச்சயமான ஆதாரம் யாதெனில், மூன்று குடும்பங்களும் 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின்படி பாகப்பிரிவினை செய்துகொண்டதால், 7.11.1960 முதல் கூட்டுக் குடும்பம் இல்லை என்பதாகும். 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமானது, மூன்று குடும்பத்தினருக்கிடையே பதியப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமாகும். 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையானது, 27.9.1953-ஆம் தேதியிடப்பட்ட முந்தைய பாகப்பிரிவினையைக் குறிப்பிட்டது. அதன்மூலம், மூன்று சகோதரர்களின் தந்தையார், தன்னுடைய முதல் மனைவியின் ஒரு மகன் மற்றும் இரண்டாம் மனைவியின் மூன்று மகன்களுக்கிடையே சொத்தைப் பிரிவினை செய்தார். 27.9.1953-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையின் மூலம் மூன்று சகோதரர்களுக்கிடையில், 86.72 ஏக்கர் சொத்து வழங்கப்பட்டது. 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் தெரிவிப்பது:-

> "28.9.1953-ஆம் தேதியிடப்பட்ட ஆவண எண் 3158/1953-ஆன பாகப்பிரிவினை ஆவணமானது 27.9.1953 அன்று கோயமுத்தூர் பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்டது. அதில், எங்களுடைய

தந்தையாரான எ.பி. கந்தசாமியின் முதல் மனைவியின் மகனும், எங்களுடைய சகோதரனுமான சென்னிமலையின் சொத்துகள், அவருக்கும், எங்களுக்கும் மற்றும் எங்களுடைய தந்தையாருக்கும் இடையில் பாகப்பிரிவினை செய்யப்பட்டது. மேற்படி ஆவணத்தின் மூலம் எங்கள் மூவருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துகளை ஒரே குடும்பமாக அனுபவித்து வருகின்றோம். அதனை முன்னேற்றம் செய்தும், விற்றும் மற்றும் விவசாயம் செய்தும் அனைத்து விதமான வணிகம் செய்து வருகின்றோம். எங்களுக்குள் பிரிவினையும் செய்துள்ளோம்.

எங்களுக்குள் பிரிவினை செய்துகொள்ள முடிவு செய்ததையடுத்து, கூட்டுக் குடும்பத்தின் வணிக முதலை 1.4.1960-ஆம் தேதியிடப்பட்ட கணக்கின் மூலம் நாங்கள் பிரித்துள்ளோம். நாங்கள் ஏற்கெனவே அணிகலன்கள், பாத்திரங்கள் மற்றும் பிற பொருட்கள் ஆகியவற்றைப் பிரித்து, தனித்தனியே அனுபவித்து வருகின்றோம். எதிர்காலத்தில் எங்களுக்கிடையில் தகராறுகளைத் தவிர்ப்பதற்காக வீட்டுக் கட்டிடங்கள், தொழிற்சாலைக் கட்டிடங்கள், பண்ணை மற்றும் நிலங்கள் ஆகியவற்றை 1.4.1960-ஆம் தேதியன்றே பிரித்துக்கொண்டபொழுதிலும் நாங்கள் அதனை இவ்வாவணத்தின் மூலம் பதிந்துள்ளோம்."

74. மேல்முறையீட்டாளரின் வழக்கு யாதெனில், 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமானது, நில உச்சவரம்புச் சட்டங்களிலிருந்து சொத்துகளைக் காப்பாற்றவே மூன்று சகோதரர்களுக்கிடையில் பதியப்பட்டது என்பதாகும். ஒரு

நபரிடமுள்ள சொத்தின் அளவைத் தீர்மானிப்பதற்கான உரிய தேதியானது 7.4.1960 ஆகும். அன்றைய தேதியில் மூன்று சகோதரர்கள் கூட்டுக் குடும்பத்திலிருந்ததையடுத்து, அவர்கள் ஒரு நபருக்கு அனுமதிக்கப்பட்டதைவிட கூடுதல் சொத்துகளைப் பெற்றிருந்தனர். நில உச்சவரம்புச் சட்டத்திடமிருந்து சொத்துகளை காப்பதற்காக பாகப்பிரிவினை செய்யப்பட்டது. நில உச்சவரம்புச் சட்டமானது மூன்று சகோதரர்களின் கைகளிலிருந்த சொத்துகளை எந்த விதத்திலும் பாதித்ததாக நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து, விசாரணை நீதிமன்றத்தினால் இவ்வாதமானது நிராகரிக்கப்பட்டது. 1961-ஆம் ஆண்டைய (நில உச்சவரம்பு நிர்ணய) தமிழ்நாடு நில சீர்திருத்தச் சட்டத்தின் சில விதிகளை நாம் கவனிக்கவேண்டியுள்ளது. வரைவிலக்கணப் பிரிவான சட்டப்பிரிவு 3, "நபர்" என்ற சொல்லை வரையறுக்கிறது. பிரிவு 3-இன் (34) பின்வருமாறு:-

> "3(34). "நபர்" தனிப்பட்டவர்களின் நிறுமம், குடும்பம், குழுமம் பதியப்பட்டிருப்பினும் அல்லது இல்லாவிடினும், கழகம் அல்லது கூட்டமைப்பு தனி அறக்கட்டளை அல்லது பொது அறக்கட்டளை ஆகியவற்றை உள்ளடக்குகிறது."

75. சட்டப்பிரிவு 5, உச்சவரம்பு பகுதிக்கு வகைசெய்கிறது. பிரிவு 5 துணைப் பிரிவு (1)(அ)-இன்படி, ஒவ்வொரு நபர் மற்றும் 5 உறுப்பினர்களுக்கு மிகாதவர்களை உள்ளடக்கிய ஒவ்வொரு குடும்பத்திற்கு நிலையாக 30 ஏக்கராகும். 30 ஏக்கர் அளவானது, பின்னர் தமிழ்நாடு மாநில அரசினால் சட்டம் 37/1972-இன் மூலம் 15 ஏக்கர் நிலமாக குறைக்கப்பட்டது. பிரிவு 5(1)(ஆ) வகுத்ததாவது, 5 உறுப்பினர்களுக்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட ஒவ்வொரு குடும்பத்தைப்

பொறுத்தவரையில், உச்சவரம்பு பகுதியானது, குடும்பத்தில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 ஏக்கர் நிலம் சேர்த்து, மொத்தம் 30 ஏக்கர் நிலமாகும். குடும்பத்தில் ஐந்திற்கும் மேற்பட்ட ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஐந்து ஏக்கர் நிலமாகும். மூன்று சகோதரர்களை உள்ளடக்கிய கூட்டுக் குடும்பமானது பிரிக்கப்படாத இந்து குடும்பமாகக் கருதி உச்சவரம்பானது தீர்மானிக்கப்படும் பட்சத்தில், நில உச்சவரம்பானது, 5 ஏக்கர் நிலத்திற்கும் கூடுதலாக ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் ஐந்து ஏக்கர் நிலம் கிடைக்கும். 1960-ஆம் ஆண்டில் மூன்று சகோதரர்களும் கொடுத்திருந்த நிலமானது, 86.52 ஏக்கர் நிலமாகும். அந்த நிலப்பரப்பானது, மூன்று சகோதரர்களும் 1953-ஆம் ஆண்டைய பாகப்பிரிவினையில் பெற்றதாகும். அதன்பின்னர், மூன்று சகோதரர்களும் மேலும் நிலத்தை வாங்கியுள்ளனர். 7.4.1960-ஆம் தேதிக்கு முன்னர் மூன்று சகோதரர்களும் தங்களுடைய கூட்டுக் குடும்பத்தைப் பிரித்திருப்பார்களெனில், பின்னர் ஒவ்வொரு நபரும் 30 ஏக்கர் நிலம் வைத்திருக்க அருகதையுடையவராக இருந்திருப்பர். இவ்வாறாக, மூன்று சகோதரர்களுக்கிடையிலான சொத்துகளின் பாகப்பிரிவினையானது, அந்த மூன்று சகோதரர்களால் வைத்திருக்கப்பட்ட சொத்துகளுக்குத் தெளிவான ஆதாயமாகும். நில உச்சவரம்புச் சட்டத்தின் மூன்று சகோதரர்களால் அடையப்பட்டிருக்குமெனில், அது நிரூபிக்கப்படவில்லை என்னும் விசாரணை நீதிமன்றத்தின் கருத்தானது நிலைநிறுத்தத்தக்கதல்ல. விசாரணை நீதிமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்ட கருத்தானது, 1961-ஆம் ஆண்டைய நில உச்சவரம்புச் சட்டத்தின் விதிகளை ஆய்ந்தபின்னர் அல்ல. மேலும், 1961-ஆம் ஆண்டைய நில உச்சவரம்புச் சட்டத்தின் உரிய தேதியானது 7.4.1960 என்பதையடுத்து, பாகப்பிரிவினையில் மூன்று சகோதரர்களும் ஏற்கெனவே சொத்துகளை 1.4.1960 அன்று பாகப்பிரிவினை

செய்துகொண்டுள்ளனர் என்னும் கூற்றானது, 1961-ஆம் ஆண்டையச் சட்டத்திலிருந்து விடுபடும் எண்ணத்திலானது என்பது தெளிவாகிறது.

76. இந்து சட்டத்தின் கீழ், கூட்டுக் குடும்பத்தின் எந்த உறுப்பினரும், கூட்டுக் குடும்பத்திலிருந்து தாமாகவே வெளியேறலாம். கூட்டுக் குடும்ப நிலையை முடிவிற்கு கொண்டுவரும் எண்ணமானது, பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்ப நிலையை தீர்மானிப்பதற்குப் போதுமானதாகும். மேற்படி விவரத்திலிருந்து மூன்று குடும்பத்தினர் தங்களுடைய சொத்துகளைப் பிரித்துக்கொள்வதன் உண்மையான சட்டநோக்கானது, அவர்கள் இந்து கூட்டுக் குடும்பத்தைத் தொடர விரும்பவில்லை என்பதல்ல. 1961-ஆம் ஆண்டைய நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விடுபடுவதன் நோக்கமேயாகும் என்பது தெளிவாகிறது. தரப்பினர்கள் 1960-ஆம் ஆண்டில் தங்களுடைய சொத்துகளைப் பிரித்துக்கொண்டபொழுது அவர்களுடைய நோக்கமே தெளிவான பொருண்மையாகும்.

77. எனினும், 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை ஆவணமானது, மூன்று குடும்பத்தினருக்கும் இடையிலான பதியப்பட்ட ஆவணம் ஆதலால், அது புறக்கணிக்கப்படமுடியாது. சொத்துகள், மேற்படி பாகப்பிரிவினையின் மூலம் மூன்றாகப் பிரிக்கப்பட்டுவிட்டன. 7.11.1960-ஆம் தேதி தொடர்பான வினா யாதெனில், அதன்பின்னர், குடும்பமானது, கூட்டுக் குடும்பமாக தொடர்ந்ததா? அல்லது கூட்டுக் குடும்ப நிலையானது 7.11.1960 அன்று முடிவிற்கு வந்ததா? என்பதாகும். உயர் நீதிமன்றத்தினாலும் வலியுறுத்தப்பட்ட மேல்முறையீட்டாளரின் வழக்கானது, 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையானது ஏற்கப்பட்டாலும், தரப்பினர்கள் கூட்டுக் குடும்பமாக வசித்து, கூட்டுக் குடும்ப நிலையைத் தொடர்ந்தனர். மேல்முறையீட்டாளரால் வைக்கப்பட்ட வாதம் யாதெனில், கூட்டுக் குடும்ப நிலைக்குத் திரும்ப சகோதரர்களுக்கிடையே மறுசேர்க்கை இருந்தது. அது, 7.11.1960-ஆம் தேதிக்கு

பிந்தைய தரப்பினர்களின் செயல்கள் மற்றும் நடத்தைகள் ஆகியவற்றிலிருந்து பெருமளவில் நிரூபிக்கப்படுகிறது என்பதாகும்.

78. இந்துச் சட்டத்தில் மறுசேர்க்கை தத்துவம் நன்கறியப்பட்டதாகும். இந்து கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினை செய்யப்பட்டாலும், பழைய நிலைக்குத் திரும்பி, கூட்டுக் குடும்ப நிலையைத் தொடரலாம். முல்லா எழுதிய இந்துச் சட்டத்தின் 22-ஆம் பதிப்பில் மறுசேர்க்கை கூட்டுக் குடும்ப நிலையைப் பெறுவதை ஆழ்ந்து சிந்திக்கையில் பத்திகள் 341, 342 மற்றும் 343 ஆகியவற்றில் பின்வருமாறு கூறுகின்றார்:-

> "341. **யார் மீண்டும் இணையலாம்,-** கூறப்படும் கூட்டுக் குடும்பத்தில் முறையாக மீண்டும் இணைவது, அசல் பாகப்பிரிவினையில் தரப்பினர்களானவர்களுக்கிடையில் மட்டுமே மறுசேர்க்கை நிகழமுடியும். அசல் பாகப்பிரிவினையின் தரப்பினர்களுக்கிடையில் மறுசேர்க்கை நிகழமுடியும் என இதிலிருந்து தோன்றுகிறது. ஆண்கள் மட்டுமே மீண்டும் சேரமுடியும்.
>
> 342. **மறுசேர்க்கை விளைவு,-** மறுசேர்க்கையின் விளைவானது, மீண்டும் இணைந்த உறுப்பினர்களை முந்தைய நிலைக்கு இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்களாக திரும்ப அனுப்புவதாகும்.
>
> 343. **மறுசேர்க்கைக்கு எண்ணம் அவசியமாகும்:** மறுசேர்க்கையை உருவாக்க சொத்துரிமையிலும் மற்றும் நலன்களிலும் ஒன்றிணைய, தரப்பினர்களுக்கு எண்ணம் இருக்கவேண்டும். **பகவான் தயால் -எதிர்- ரியோத்தி தேவி** என்ற வழக்கில் தரப்பினர்கள் முந்தைய

நிலைக்கு திரும்பும் எண்ணத்துடன் அவர்களுக்கிடையில் ஒரு உடன்படிக்கை இருக்கவேண்டும் என்பது மறுசேர்க்கையின் உள்ளார்ந்த தத்துவமாகும். அத்தகைய உடன்படிக்கையானது வெளிப்படையானதாகவோ அல்லது தரப்பினர்களின் நடத்தையிலிருந்து மறைமுகமாக உணர்வதாகவோ இருக்கலாம். நடத்தையானது மறுத்தற்கியலாத தன்மையுடையதாக இருக்கவேண்டும் மற்றும் மறுசேர்க்கையை உறுதிசெய்பவர் மீதே பெரிதும் சுமை சார்ந்திருக்கும் என உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது."

79. **பழனி அம்மாள் -எதிர்- முத்துவெங்கடாச்சர்ல மோனியகர் மற்றும் பலர், ஏ.ஐ.ஆர். 1925 பி.சி. 49** என்ற வழக்கில் அரச நீதிப்பேரவை தீர்ப்பளித்ததாவது, "இந்து கூட்டுக் குடும்பம் பிரியுமெனில், அந்த குடும்பமோ அல்லது அதன் ஏதேனும் உறுப்பினர்களோ மீண்டும் இந்து கூட்டுக் குடும்பமாக இணைய உடன்படலாம். ஆனால், அத்தகைய மறுசேர்க்கையானது, தெளிவான காரணங்களுக்காக இருக்கவேண்டும். அது மிதாஷரா சட்டத்தின் கீழ் பல வழக்குகளுக்குப் பொருந்தும். அது மிக அறிதானதாகும். அது நிகழும்பொழுது பிற தகராறுக்குரிய பொருண்மைகள் நிரூபிக்கப்படுவதுபோன்று கண்டிப்பாக நிரூபிக்கப்படவேண்டும். அரச நீதிப்பேரவையானது பத்தி 9-இல் பின்வருமாறு வகுத்துள்ளது:-

"9. இந்து கூட்டுக் குடும்பத்தினரின் பங்குகள் மதிப்பிடப்பட்டுள்ளன என்பதே குடும்பம் பிரிந்திருந்தது என்னும் அனுமானத்திற்கு வழிகோலாது. பிரிவினையிருப்பின் இந்து கூட்டுக்

குடும்பத்தினரின் பங்குகள் என்ன என மதிப்பிடுவதற்காக திட்டமிடப்பட்ட உடனடி பிரிவினையைவிட வேறு காரணங்கள் இருக்கலாம். அத்தகைய கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர் கூட்டுக் குடும்பத்தின் பிற உறுப்பினர்களிலிருந்து தாமாகப் பிரிந்து, அப்பிரிவினையில் கூட்டுக் குடும்பத்தின் சொத்துகளில் தன்னுடைய பங்கை மதிப்பிட்டு, பாகம் பிரித்துக்கொள்ள அருகதையுடையவர் என்பதும், எஞ்சிய இந்து கூட்டுக் குடும்பத்தினர், தமக்குள் ஏதொரு தனிப்பட்ட உடன்படிக்கை ஏதுமின்றி, கூட்டுக் குடும்பத்தினராகத் தொடர்ந்து, கூட்டுக் குடும்பச் சொத்தின் பாகப்பிரிவினைக்குப் பின்னர் எஞ்சியுள்ளதை அனுபவிக்கலாம். தொடரும் உறுப்பினர்கள் தகராறு செய்து கொள்வார்கள் எனில், அவர்களிலிருந்து முந்தைய கூட்டுக் குடும்ப உறுப்பினர் பிரிந்த வழியிலேயே அவர்களது கூட்டுக் குடும்ப வணிகம் மேற்கொள்ளப்பட்டதாக யூகிக்கப்படமுடியும் என்பதும் தற்பொழுது ஐயத்திற்கப்பால் தெளிவாகிறது. ஒரு இந்து கூட்டுக் குடும்பம் பிரிகிறதெனில், அந்த குடும்பமோ அல்லது அதன் உறுப்பினர்களோ மீண்டும் இந்து கூட்டுக் குடும்பமாக இணைய உடன்படலாம். ஆனால், அத்தகைய மறுசேர்க்கையானது, தெளிவான காரணங்களுக்காக இருக்கவேண்டும் என்பதும் மிகத் தெளிவாகிறது. அது, மிதாஷ்ரா சட்டத்தின் கீழ் மிக அரிதான நிகழ்வுகளில் பல வழக்குகளுக்குப் பொருந்தும். அது நிகழும்பொழுது, பிற தகராறுக்குரிய பொருண்மைகள்

நிரூபிக்கப்படுவதுபோன்றே நிரூபிக்கப்படவேண்டும். இறுதிக் கூற்றிற்கான முதன்மையான தீர்ப்புரை யாதெனில், பாலபக்ஸ் லதுராம் -எதிர்- ருக்மாபாய் *(1903) 30* கல்கத்தா *725* என்ற வழக்காகும்."

80. கவனிக்கப்படவேண்டிய மற்றொரு தீர்ப்புரையானது, **முக்கு வெங்கட இராமைய்யா -எதிர்- முக்கு தாதைய்யா மற்றும் பலர், ஏ.ஐ.ஆர்.** *1943* **மெட்ராஸ்** *538* என்ற வழக்கில் மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையாகும். மேற்படி வழக்கில் *1903*-ஆம் ஆண்டில் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டது. அதன்விளைவாக, தந்தையார் தன்னுடைய இரண்டாம் மனைவி மற்றும் குழந்தைகளுடன் பிரிந்து, முதல் மனைவியின் மகன்களிடமிருந்து தனித்து வாழத் துவங்கினார். எதிர்மேல் முறையீட்டாளரின் வழக்கு யாதெனில், *1903*-ஆம் ஆண்டில் அவர்களுடைய தந்தையார் அவர்களுடனிருந்து விலகி வசிக்க முடிவுசெய்த பின்னர், அவரும் அவருடைய சகோதரர்களும் கூட்டாகத் தொடர்ந்தனர் என்பதாகும். பாகப்பிரிவினை நிகழ்ந்த பின்னரும் சகோதரர்களுக்குள் மறுசேர்க்கை இருந்துவருகிறது என்பதற்கு மாற்று வழக்கும் வைக்கப்பட்டது. மெட்ராஸ் உயர் நீதிமன்றம் பத்தி *5*-இல் கூறியதாவது:-

*"5. ....*ஆனால், அனைத்து உறுப்பினர்களுக்குமிடையில் பொது பாகப்பிரிவினை ஏற்படுமெனில், கூட்டு நிலையானது நிறுவப்படுவதற்கு மறுசேர்க்கைதான் சாத்தியமான ஒன்றாகும். உணவிற்காகவோ அல்லது வழிபாட்டிற்காகவோ ஒரு வீட்டில் இணைவது அல்லது சேர்ந்து வணிகம் செய்தல் போன்றவை மீண்டும் இணைவதற்கான எண்ணமானது, இந்துச் சட்டம்

கோருவது தெளிவாக நிறுவப்பட்டாலன்றி, கூட்டுக் குடும்பத்தின் அனைத்து தன்மைகளுடன் இந்து கூட்டுக் குடும்ப நிலைக்குக் கொண்டுவரமுடியாது. விதி யாதெனில், பாண் குயர் -எதிர்- இராம் நாராயண் சௌத்ரி, ஏ.ஐ.ஆர். 1929 பாட்னா 353 என்ற வழக்கில் பாட்னா உயர் நீதிமன்றத்தினால் சரியாக தீர்ப்பளிக்கப்பட்டதுபோன்று நான் கூறுவதானால், அதில் அறிவார்ந்த நீதிபதி கருத்துத் தெரிவித்ததாவது:

> அதனை (மறுசேர்க்கை) நிறுவ ஏற்கெனவே பிரிந்த தரப்பினர்கள் ஒன்றாக வசித்தனர் அல்லது வணிகம் செய்தனர் என்பதை மட்டுமல்ல, கூட்டுக் குடும்பத்தை அதன் அனைத்து தன்மைகளுடன் உருவாக்கும் நோக்கில் ஒன்று சேர்ந்ததாகத் தெரிவிப்பது அவசியமாகும்."

81. பிரிந்திருந்த சகோதரர்கள், சேர்ந்து வசித்தது மற்றும் வணிகம் செய்தது (மறுசேர்க்கை) ஏற்கப்பட்டதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பத்தி 17-இல் பின்வருவன வகுக்கப்பட்டன:-

> "17. பின்னர் வினாவானது யாதெனில், (மறுசேர்க்கை) வழக்கை ஆதரிப்பதற்கு இவ்வறிந்தமையானது போதுமானதா? என்பதாகும். நிரூபிக்கும் பொறுப்பானது பெரிதும் எதிர்மேல்முறையீட்டாளரைச் சார்ந்தது என்பதிலும் மற்றும் உணவிற்காகவோ அல்லது வழிபாட்டிற்காகவோ ஒரு வீட்டில் இணைதல் ஒன்றே

மறுசேர்க்கையாகாது. நிறுவப்படவேண்டியது யாதெனில், பிரிந்திருந்த தரப்பினர்கள் சேர்ந்து வசித்தது மற்றும் வணிகம் செய்தது மட்டுமல்ல. ஆனால், அதன்மூலம் அவர்கள் பிரிந்தநிலையை சொத்திலும் மற்றும் நலனிலும் இணைதலின் அனைத்து நிகழ்வுகளுடன் கூட்டு நிலையாக மாற்றும் நோக்குடன் இணைந்தனர். எங்களுடைய கருத்தில், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் கையாண்ட விதமானது, 1903-ஆம் ஆண்டைய பாகப்பிரிவினைக்கு முன்பிருந்த கூட்டுக் குடும்ப நிலையை மீண்டும் உருவாக்கும் வெளிப்படையான எண்ணத்தை அவர்கள் கொண்டிருந்தனர் என்பதில் ஐயமேதுமில்லை. அவர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு எழுந்திருந்ததால், முதல் மனைவியின் மகன்களிடமிருந்து தந்தையாரைத் தனித்து வாழச்செய்வதே உடனடி நோக்கமாகும். மகன்களுக்கிடையில் பிரிவினைக்கான காரணமேதும் ஒருபொழுதும் இல்லையாதலால், அவர்கள் தந்தையாரிடமிருந்து பிரிந்தது முதல், கூட்டாக வாழ முடிவு செய்தனர். அந்நேரத்தில் 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் இளவர் என்பது உண்மையாகும். ஆனால், அவர் பருவமடைந்தப் பின்னர் ஏற்கெனவே மேல்முறையீட்டாளரும் மற்றும் நாகய்யாவும் சேர்ந்துவாழத் துவங்கிவிட்ட கூட்டுக் குடும்ப நிலையை அவர் ஏற்றுக்கொள்வாரெனில், அது சிறிது வேறுபாட்டை ஏற்படுத்தும். எங்களுடைய கருத்தில், மீண்டும் இணைய, முறையான மற்றும் வெளிப்படையான உடன்படிக்கையிருக்கவேண்டும் என்பது

அவசியமில்லை. அத்தகைய உடன்படிக்கையானது, வேறு எதனாலும் விளக்கமுடியாத தெளிவான நன்னடத்தைச் சான்றின் மூலம் நிறுவப்படமுடியும். எங்களுடைய கருத்தில், அத்தகைய நிலைப்பாடானது நிறுவப்படுகிறது. அது அவ்வாறிருக்க, வழக்குச் சொத்தில் மேல்முறையீட்டாளரின் தனிப்பட்ட உரிமைக்கான கோரிக்கையானது மறுக்கப்படவேண்டும். மேல்முறையீடானது தோல்வியுறுகிறது. எனவே, செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்."

82. (மறுசேர்க்கை) கோட்பாட்டின் அடிப்படையில் பார்வையிடப்படவேண்டிய மேலும் ஒரு தீர்ப்புரையானது, **தி/ள். பரமாநந்த் எல். பஜாஜ், பெங்களூர் -எதிர்-வருமான வரி ஆணையர், கர்நாடகா, II, பெங்களூர்,** *(1981)* **எஸ்.சி.சி. ஆன்லைன் கர்நாடகா** *131* என்னும் வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையாகும். மாண்புமிகு நீதியரசர் திரு. இராம ஜாய்ஸ், ஸ்மிரிதிஸ் மற்றும் தொடர்புடைய தீர்ப்புரை ஆகியவற்றை குறிப்பிட்ட பின்னர், மறுசேர்க்கையானது பாகப்பிரிவினை செயல்முறையின் எதிர்மறையாகும் என வரையறுத்துள்ளார். பத்திகள் *8* மற்றும் *12* ஆகியவற்றில் பின்வருமாறு கூறியுள்ளார்:-

"8. மறுசேர்க்கையின் அடிப்படைக் கூற்றானது, ப்ரஉறஸ்பதி ஸ்மிரிதி *(*கெய்க்வாட்டின் ஓரியண்டல் வரிசைகள், பாகம் LXXXV, பக்கங்கள் *214-215)*, ஸ்மிரிதி- சந்திரிகா III வயவஉறராகண்டா பகுதி II, பக்கங்கள் *702-703*, *(1916)* உறனெஸ் அரசினால்

அதாவது மைசூர் மகாராஜாவினால் வெளியிடப்பட்டது. ஆங்கிலம் ஜே.ஆர். கார்புரா, பகுதி III *(1952)* பக்கங்கள் *667-670).*

विभक्तो य पुन: पित्रा भ्रात्रा चैक्त्र सस्थित: ।
पितृव्येणा थवा प्रीत्या तत्संसृष्ट: स उच्यते ॥

ஒருமுறை பிரிந்து தனித்து வாழ்பவர், தந்தையுடனான அல்லது தந்தையாரின் சகோதரர்களுடனான பாசத்தின் விளைவாக மீண்டும் கொண்டுவரப்படுவாரானால், அது மறுசேர்க்கை எனப்படும்.

संसृष्टौ यौ पुन: प्रीत्यतौ परस्परभागिनौ ।

இந்து கூட்டுக் குடும்பத்தின் இரண்டு உறுப்பினர்கள் பாசத்தின் விளைவாக மீண்டும் இணையும்பொழுது, அவர்கள் ஒருவருக்கொருவர் சொத்தில் பங்குபெறுகின்றனர்.

ப்ரஉறஸ்பதி குறித்த ஸ்மிரிதி-சந்திரிகா புத்தகத்தின் படைப்பாளரான தேவண்ணா அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்தானது-

सहवासे पुरुषाणामाहत्य संसर्ग भावात धनद्वारेण
संसर्गो वाच्य इतीदंताव्य वहारनिमितभूतावच्छेदकाप
नोदेन विभक्तानां पूर्ववदेकराशीकरणपर्यन्तस्संसगौ
न पुन: सहवासमत्रिमति मन्तव्यम् ।

ஒன்றிணைதல், சேர்ந்து வசித்தலால் அல்ல. ஒன்றிணைதல் செல்வத்தால் ஏற்படுவதென தெரிவிக்கப்படுகிறது. எனவே, அந்த

வேறுபடுத்தும் காரணியை அகற்றுவதன் மூலம், பிரிந்த உறுப்பினர்கள் ஒன்றிணைதல் என்பது முடிந்தவரையில் அனைத்து செல்வங்களையும் பொதுவாக்குவதன் மூலம் சாத்தியமாகும் என்பது புரிந்துகொள்ளப்படவேண்டும். முன்பு கூறியது போன்றே, சேர்ந்து வாழ்வதால் மட்டுமேயல்ல.

யாஜ் குறித்து மிதாக்ஷரா II பக்கங்கள் *138-139*, மீண்டும் இணைந்த உறுப்பினர்களுக்கிடையிலான பாகப்பிரிவினையில் பங்குரிமையைக் குறித்து தனி விதியை வரையறுத்து மீண்டும் இணைதலின் விளைவை பின்வருமாறு விளக்குகிறது:

विभक्तं धनं पुनमिश्रीकृतं संस्सृष्टं
तदस्यास्तीति संसृष्टी ।

பிரிந்து மீண்டும் ஒன்றாக கலத்தலின் விளைவுகள், மறுசேர்க்கை கூறப்படுகின்றன. அவ்வாறு யாருடன் அத்தகைய திருப்பம் நிகழ்கிறதோ, அவர் மீண்டும் இணைந்த கூட்டுக் குடும்ப உறுப்பினராக கருதப்படுவார்.

மேற்படி விதிகள், அனேக வழக்குகளில் முதற்பொருள் விளக்கமாக இருந்துவருகின்றன.

12. மிதாக்ஷரா மற்றும் ஸ்மிரிதி-சந்திரிகா ஆகியவற்றில் விளக்க உரையாளர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள், எங்கள் முன்பாக கோடிடப்பட்ட முன் தீர்ப்புரைகள் மற்றும் அதனைக் கையாளும் இந்து சட்டமானது எண்ணும் நோக்கம் ஆகியவற்றை

பரிசீலித்ததில், மிதாஷ்ரா சட்டத்திற்குட்பட்ட பிரிக்கப்படாத இந்து குடும்பத்தின் முந்தைய உறுப்பினர்கள், சேர்ந்துவந்து, மிதாஷ்ரா சட்டத்தின் கீழ் மீண்டும் கூட்டுக் குடும்பத்தை ஏற்படுத்த இயலும் வகையில், விதிகள் அளிக்கப்பட்டுள்ளன என எங்களுக்கு தோன்றுகிறது. பரஸ்பர அன்பு, இரத்த உறவிலிருந்து எழும் பாசம் மற்றும் மீண்டும் இணைவதற்காக அங்கிருந்தெழும் ஆசை ஆகியவை மறுசேர்க்கையின் அடிப்படையை ஏற்படுத்துகிறது. இது ப்ரஉறஸ்பதி ஆவணத்திலிருந்து சான்றாகிறது. அதில் மீண்டும் இணையக்கூடிய நபர்களின் உறவுமுறைகளுங்கூட குறிப்பிடப்படுகிறது. சில விளக்கவுரையாளர்கள் ப்ரஉறஸ்பதியில் கூறப்பட்டுள்ளவை உதாரணங்களே. அவை, முழுமையானவையல்ல என்றும், அதில் கூறப்படாதவர்களுங்கூட மீண்டும் இணையலாமென, சில விளக்கவுரையாளர்கள் தெரிவித்துள்ளனர். (பார்க்க: கோபாலசந்தர சர்காரால் மொழி பெயர்க்கப்பட்ட விர்மித்ரோதயா என்ற புத்தகத்தின் (1879) பக்கங்கள் 204-205 பார்க்க) விவேதசிந்தாமணி கெய்க்வாட்டின் ஓரியண்டல் வரிசை பாகம் XCIX பக்கங்கள் 288-289) எப்படியாயினும், மறுசேர்க்கை என்பது முன்நாளில் பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் சாத்தியம் என்பதில் முரண்பாடேதுமில்லை. எனவே மறுசேர்க்கை என்பது பாகப்பிரிவினை செயல்முறையின் எதிர்மறையாகும். எனவே,

மறுசேர்க்கை என்பது சேர்ந்து வசிப்பதற்கான ஏதோ ஒரு உடன்படிக்கையல்ல. ஆனால் முந்தைய பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்களை முந்தைய பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்ப நிலைக்கு மீண்டும் கொண்டுசெல்ல அவ்வுறுப்பினர்களுக்குள் சொத்து மற்றும் நலன் ஆகியவற்றில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்த எண்ணப்படுகிறது. எனவே, மறுசேர்க்கைக்கு முன்னர், விலகிச் செல்லாதபொழுது, அவர்களுக்குள் பாகப்பிரிவினை நிகழ்ந்த கூட்டுக் குடும்பச் சொத்துகளில், மீண்டும் இணையும் உறுப்பினர்கள் அனைவருக்கும், மறுசேர்க்கையானது உரிமையை ஏற்படுத்துகிறது. அதுவே ப்ரஉறஸ்பதியால் வலுக்கட்டாயமாக கொண்டுவரப்படும் மறுசேர்க்கையின் சட்டவிளைவாகும். அது கூறுவதாவது, "இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் பாசத்தின் விளைவாக மீண்டும் இணையுமிடத்து, அவர்கள் பரஸ்பர சொத்துகளில் பங்கு பெறுகின்றனர்". மிதாஷரா கூறுவதாவது, பிரிக்கப்பட்ட சொத்துகளை இரண்டறச் சேர்ப்பதே மறுசேர்க்கையின் விளைவாகும் என்பதில் ஐயமேதுமில்லை. நிரூபிக்கப்படுவது போன்று மறுசேர்க்கையும் நிரூபிக்கப்பட வேண்டும். எனவே, அது பின்வருமாறு, மறுசேர்க்கையின் தரப்பினரான இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் எவரும் மற்றும் மறுசேர்க்கையை ஒப்புக்கொள்ளும் எவரும், முந்தைய பாகப்பிரிவினையில் தான் பெற்றிருந்த மற்றும் இன்னமும்

தன்னிடமுள்ள சொத்தானது, மீண்டும் ஏற்படுத்தப்பட்ட இந்து கூட்டுக் குடும்பத்தின் சொத்தாகாது என வாதிட அனுமதிக்கப்பட முடியாது. ஆனால் மறுசேர்க்கையானது மறுக்கப்படும்பொழுது, பிற மறுக்கப்படும் பொருண்மைகள் நிரூபிக்கப்படுவதுபோன்று, மறுக்கப்படும் மறுசேர்க்கையானது நிரூபிக்கப்படவேண்டும் என்பதில் ஐயமேதுமில்லை. மீண்டும் இணையும் அனைத்து உறுப்பினர்களும் பொதுச் சொத்தை உருவாக்க தன்னுடைய சொத்தை கொண்டுவரவில்லை என்னும் சூழ்நிலையானது மறுசேர்க்கையேதுமில்லை என வாதிடும் ஏதேனும் தரப்பினரின் வாதத்திற்காதரவாகலாம். எனினும், மறுசேர்க்கையானது, அதன் அனைத்து உறுப்பினர்களாலும் ஒப்புக்கொள்ளப்படுமெனில் அல்லது நிரூபிக்கப்படுமெனில், முந்தைய பாகப்பிரிவினையின்பொழுது, மீண்டும் இணைந்த உறுப்பினர்களின் சொத்துகளின் பங்காகி, மீண்டும் இணையும்பொழுது அவரது அனுபவத்தில் உள்ள சொத்துகள், கூட்டுக் குடும்பச் சொத்துகளாகின்றன. அவர்களுள் சிலர் தங்களுடைய சொத்துகளைப் பொது சொத்துகளில் சேர்க்காவிட்டாலும் அது தெரிந்தோ அல்லது தெரியாமலோ மற்றும் பரஸ்பர சம்மதத்துடனோ அல்லது இல்லாமலோ, மறுசேர்க்கையின் தரப்பினர்களால் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அல்லது மறுசேர்க்கையை வாதிடும் தரப்பினர் அதனை நிரூபிக்காவிட்டாலும், அதன் நிலை வேறாகும். அந்நிகழ்வில் மறுசேர்க்கையே இல்லை."

83. இப்பொழுது, பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தில் மறுசேர்க்கையைக் குறித்து கையாளும் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையைக் கவனிக்கலாம். **பக்வான் தயால் -எதிர்- ரியோதி தேவி, ஏ.ஐ.ஆர். 1962 எஸ்.சி. 287** என்ற வழக்கில் இந்து சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் இந்து கூட்டுக் குடும்பத்தின் கோட்பாடுகள் ஆகியவற்றை இந்நீதிமன்றம் ஆய்வுசெய்தது. பத்தி 16-இல் ஒவ்வொரு இந்து குடும்பமும், முரண்பாடேதும் நிரூபிக்கப்பட்டாலன்றி, கூட்டுக் குடும்பம் என்றே அனுமானிக்கப்படும் என்பது பொதுவான கோட்பாடு என தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், இவ்வனுமானமானது, நேரடி சான்றின் மூலமோ அல்லது காலப்போக்கில் நடத்தையின் மூலமோ மறுக்கப்படலாம். மேற்படி வழக்கில், வினாக்களுள் ஒன்று யாதெனில், பாகப்பிரிவினைக்குப் பின்னர் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கிடையே மறுசேர்க்கை இருந்ததா? என்பது தொடர்பானதாகும். இந்நீதிமன்றம் அதனை அங்கீகரிக்கும் தீர்ப்புரையான அரச நீதிப்பேரவையினால் வழங்கப்பட்ட **(மேற்படி) பழனி அம்மாள்** என்னும் வழக்கின் தீர்ப்புரையைக் குறிப்பிட்டுள்ளது. அதன் 22-ஆம் பத்தியில் வரையறுக்கப்பட்டது பின்வருமாறு:-

> "22. இவ்வினாவிற்கு சரியான அணுகுமுறைக்காக பழனி அம்மாள் -எதிர்- முத்து வெங்கடாச்சர்ல மோனியகர், [(1924) எல்.ஆர். 52 ஐ.ஏ. 83, 86]:
>
> "அதில், நீதித்துறை குழுவின் கருத்துரையானது மேலோட்டமாக கோடிடப்படுவது வசதியாகயிருக்கும்.
>
> "ஒரு இந்து கூட்டுக் குடும்பம் பிரியுமெனில், குடும்பமோ அல்லது உறுப்பினர்களோ மீண்டும்

> கூட்டுக் குடும்பமாக இணைய உடன்படலாம். ஆனால், அத்தகைய மறுசேர்க்கையானது தெளிவான காரணங்களுக்காக இருக்கவேண்டும். அது மிக அரிதான நிகழ்வாக, மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் பொருந்துவதாகும். அது நிகழும் பொழுது, அது பிற தகராறுக்குரிய பொருண்மைகள் நிரூபிக்கப்படுவதுபோன்று கண்டிப்பாக நிரூபிக்கப்பட வேண்டும். அந்த இறுதிக் கூற்றிற்கான முதன்மையான ஆவணமானது, பால்பக்ஸ் லதுராம் -எதிர்- ருக்மாபாய், *(1903)* எல்.ஆர். *30* ஐ.ஏ. *190* என்ற வழக்கின் தீர்ப்புரையாகும்."

மறுசேர்க்கையை ஏற்படுத்த, சொத்திலும் மற்றும் நலனிலும் மீண்டும் இணைய தரப்பினர்களுக்கு எண்ணம் இருக்கவேண்டும் என்பது நன்கு தீர்வுசெய்யப்பட்டதாகும். முந்தைய இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் நிலைக்கு திரும்பும் எண்ணத்துடன் தரப்பினர்களுக்கிடையில் உடன்படிக்கை இருக்கவேண்டும் என்பது உட்கிடையாகும். அத்தகைய உடன்படிக்கையானது வெளிப்படையானதாக இருக்கவேண்டியதில்லை. ஆனால், மீண்டும் இணைந்திருப்பதாகக் கூறப்படும் தரப்பினர்களின் நடத்தையிலிருந்து புரிந்துகொள்ளப்படும் அத்தகைய நடத்தையானது மறுக்கமுடியாத தன்மையுடையதாகவும் மற்றும் அதிலிருந்து மறுசேர்க்கை உடன்படிக்கையானது அவசியம்

உணரப்படக்கூடியதாகவும் இருக்கவேண்டும். நிரூபண சுமையானது, மறுசேர்க்கையை வலியுறுத்தும் தரப்பினர் மீது பெரிதும் சார்ந்திருப்பதால், மறுசேர்க்கையை ஒத்த நடத்தை அல்லது சாதாரண கூட்டு அனுபவம் போன்ற தெளிவற்ற நடத்தையானது, மறுசேர்க்கை வாதத்தை நிலைநிறுத்தாது. இவ்வாறாக சட்டநிலைப்பாடானது, மாய்னேவின் இந்து சட்டம் 11-ஆம் பதிப்பு பக்கம் 569-இல் நேர்த்தியாக தொகுத்தளிக்கப்பட்டுள்ளது:

> "பாகப்பிரிவினை செய்யப்படும்வரையில் அனுமானமானது இணைத்தலுக்கு ஆதரவானது என்பதையடுத்து, பாகப்பிரிவினைக்குப் பின்னர், அனுமானமானது மறுசேர்க்கைக்கு எதிரானதாகும். அதனை நிறுவ, ஏற்கெனவே பிரிந்த தரப்பினர்கள் சேர்ந்து வசிப்பது அல்லது வணிகம் செய்தது மட்டுமல்ல, அவர்கள் அதிலிருந்து தம்முடைய நிலையைமாற்றி, கூட்டுக் குடும்பத்தின் அனைத்து வழக்கமான தன்மைகளுடன் கூட்டுக் குடும்பத்தை உருவாக்கவே அவ்வாறு செய்தனர் என்பது நிரூபிக்கப்படவேண்டும். பிரிந்த இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள், புதிதாக உருவாக்கப்பட்ட இந்து கூட்டுக் குடும்பத்தின் உரிமைகள் மற்றும் கடமைகளுக்குள் தங்களை இணைத்துக்கொள்வதற்காக, உடன்படிக்கையின்

மூலம் தங்கள் நிலையை மாற்றிக்கொள்வதில் வெற்றிக்கண்டுள்ளனர் என்பதை நிறுவும் பொறுப்பை நிறைவேற்றுவதில் திருப்தியுறச்செய்யும் ஒருமித்தச் சான்றைக் கோருகிறது."

இக்கருத்துகளுக்கு நாங்கள் முழு இசைவையளிப்பதால், கற்றறிந்த அரசு வழக்குரைஞரால் வலிமையாகச் சார்ந்து நிற்கப்பட்ட இரு தீர்ப்புரைகளைப் பரிசீலிப்பதைத் தவிர, மேலும் நாங்கள் தீர்ப்புரைகளை ஆய்வுசெய்து, இவ்வழக்கைத் தொடரத் தேவையில்லை. வெங்கடராமையா -எதிர்- தாதையா, [ஏ.ஐ.ஆர். 1943 மெட்ராஸ் 538] என்பது மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் கூட்டமர்வின் தீர்ப்புரையாகும். "இந்து சட்டத்தின் கருத்துப்படி, மீண்டும் இணைந்திருப்பதற்கான எண்ணமானது தெளிவாக நிறுவப்பட்டாலன்றி, ஒரு வீட்டில் உணவிற்காகவோ அல்லது வழிபாட்டிற்காகவோ இணைந்திருத்தல் அல்லது சேர்ந்து வணிகம் செய்தல் ஆகியவை பிரிந்த நிலையை மாற்றி, இணைந்திருத்தலின் அனைத்துத் தன்மைகளுடன் கூடிய மறுசேர்க்கையில் இணையும் நிலையைக் கொண்டுவராது." மேற்படி கூற்றானது விதிவிலக்கற்றது. அதுவே, நன்கு தீர்வுசெய்யப்பட்ட சட்டமாகும். அவ்வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் அங்கு மறுசேர்க்கை இருந்தது என்னும் முடிவிற்கு அறிவார்ந்த நீதிபதிகள் வந்தனர். அங்கு பாகப்பிரிவினையானது,

தந்தையாருக்கும் மற்றும் அவருடைய முதல் மனைவியின் மகன்களுக்கும் இடையில் நிகழ்ந்தது. மகன்களுள் ஒருவர் இளவராவார். வினாவானது யாதெனில், கூறப்பட்ட பாகப் பிரிவினைக்குப் பின்னர், சகோதரர்களுக்கிடையில் உடனடியாக மறுசேர்க்கை இருந்ததா? என்பதாகும். மகன்களுக்கிடையில் பிரிவினைக்கான காரணமேதும் இல்லாமையால், அவர்களுடைய அனைத்து நடத்தைகளில் மறுசேர்க்கையானது சாத்தியம் என்பதைத் தவிர, வேறு விளக்கமேதும் இல்லை என சான்று தெரிவித்ததென அறிவார்ந்த நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். பாகப்பிரிவினையின்பொழுது சகோதரர்களுள் ஒருவர் இளவரான பொழுதிலும், அவர் பருவ வயதை எட்டியதும், அவர் மறுசேர்க்கை நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டார் என்பதையுங்கூட அவர்கள் குறிப்பிட்டனர். கற்றறிந்த அரசு வழக்குரைஞரால் சார்ந்து நிற்கப்பட்ட கருத்துரைகள் இவ்வாறு தெரிவிக்கிறது:

> "எங்களுடைய கருத்தில் மீண்டும் இணைய முறையான மற்றும் வெளிப்படையான உடன்படிக்கை இருக்க வேண்டியதில்லை. அத்தகைய உடன்படிக்கையானது, வேறு விளக்கத்தினால் மறுக்கமுடியாத தெளிவான நடவடிக்கைச் சான்றின் மூலம் நிறுவப்படமுடியும்."

இக்கோட்பாடுங்கூட விதிவிலக்கற்றதாகும். ஆனால், அவ்வழக்கின் பொருண்மைகள் முற்றிலும் தற்பொழுதைய வழக்கின்

பொருண்மைகளுக்கு வேறுபட்டதாகும். நீதிபதிகளால் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் தற்பொழுதைய வழக்கில் நாங்கள் முடிவிற்கு வருவதற்கு உதவ முடியாது."

84. (**மேற்படி**) **முக்கு வெங்கடராமையய்யா** வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையை இந்நீதிமன்றமும் அங்கீகரித்ததை, மேற்படி கருத்துரைகள் தெரிவிக்கின்றன. மீண்டும், **அனில் குமார் மித்ரா மற்றும் பலர் -எதிர்- கணேந்தர நாத் மித்ரா மற்றும் பலர், (1997) 9 எஸ்.சி.சி. 725** என்ற வழக்கில் "முந்தைய பாகப்பிரிவினைக்குப் பின்னர் தரப்பினர்கள் மீண்டும் இணைந்துள்ளனர் என்னும் அனுமானத்திற்கு அவர்களின் நடவடிக்கை வழிகோலலாம் என தீர்ப்பளித்தது. பத்தி 4-இல் பின்வரும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளன:-

"4. .....முந்தை பாகப்பிரிவினைக்குப் பின்னரும், தரப்பினர்கள் தங்களுடைய செயல்கள் மூலம் அவர்கள் கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களாகத் தொடர்ந்தனர் என்பது உண்மையாகும். ஆனால், இது தொடர்பாக குடும்பச் சொத்துகளைக் காப்பதற்காக அவர்களின் நடத்தை மற்றும் நடத்தும்விதம் ஆகியவற்றால் அறிவதாகும்....."

85. இப்பொழுது நாம் கோப்பிலுள்ள ஆவணங்களைக் கவனிப்போம். மூதாதையர் வீடானது, கருமத்தம்பட்டி, சதப்பாளையம் கிராமத்தில் இருந்தது. அதில், மூன்று சகோதரர்களும் அவர்களுடைய தந்தையார் எ.வி. கந்தசாமியுடன் வசித்தனர். ம.சா.2-ம் தான் ரங்கசாமியை மணந்த பின்னர், சதப்பாளையத்தில் உள்ள மூதாதையர் வீட்டில் வசித்ததாகத் தன்னுடைய கூற்றில் கூறினார். பின்னர், 1963-ஆம் ஆண்டில்

மூன்று சகோதரர்களும் சோமனூரில் வீட்டுமனை வாங்கி, புதிய வீடு கட்டி, மூன்று சகோதரர்களின் குடும்பங்களை சோமனூர் வீட்டிற்குக் கொண்டுச்சென்று, அங்கு கூட்டுக் குடும்பமாக வசித்தனர். அது மூன்று சகோதரர்களை உள்ளடக்கிய கூட்டுக் குடும்பத்தின் புதிய வீடானது. புதிய வீடானது, 1963-ஆம் ஆண்டில் வீட்டு மனை வாங்கிய பின்னர் கட்டப்பட்டு, 1964-ஆம் ஆண்டுவாக்கில் மூன்று சகோதரர்களின் குடும்பங்களும் அங்கு வசிக்கத் துவங்கினர். அது, அனைத்து சகோதரர்களும் கூட்டாக வசிக்கும் எண்ணத்துடன் இந்து கூட்டுக் குடும்பமாக தொடர்ந்தனர் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினைக்குப் பின்னர் மூன்று குடும்பங்களும் சேர்ந்து அனேக அசையாச் சொத்துகளை வாங்கியுள்ளனர். அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:-

i) வ.சா.ஆ. 42-ஆக தாக்கல் செய்யப்பட்ட 9.6.1962-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் (அ) கே. ரங்கசாமி, (ஆ) எஸ்.கே. குமாரசாமி மற்றும் (இ) எஸ்.கே. சின்னசாமி ஆகியோர் பெயரில் கருமத்தம்பட்டியில் 5.6 ஏக்கர் நிலங்கள்.

ii) வ.சா.ஆ.43-ஆக தாக்கல் செய்யப்பட்ட 16.10.1963-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் வீடு கட்டுவதற்காகவே வாங்கப்பட்டது. அது, கிரைய ஆவணத்திலேயே கூறப்பட்டுள்ளது. அவ்வாவணமானது, (அ) கே. ரங்கசாமி, (ஆ) எஸ்.கே. குமாரசாமி மற்றும் (இ) எஸ்.கே. சின்னசாமி ஆகியோர் பெயரில் வாங்கப்பட்டது.

iii) 14.9.1972-ஆம் தேதியிடப்பட்ட மூன்று கிரைய ஆவணங்கள், அதாவது வா.சா.ஆ.41, ம.சா.10 மற்றும் ம.சா.ஆ.11 ஆகியவற்றின் மூலம் குன்னூரில்

ஹைறபீல்ட் எஸ்டேட் என்ற பெயரில் பல ஏக்கர் நிலங்கள் எஸ்.கே. குமாரசாமி, எஸ்.ஆர். சோமசுந்தரம் (இளவர், தாயார் ஜானகியம்மாள் காப்பாளராக) மற்றும் எஸ்.ஆர். சண்முக வேலாயுதம் ஆகியோர் பெயரில் வாங்கப்பட்டு, கூட்டுக் குடும்பம் அதில் வணிகம் செய்துவருகிறது.

86. மூன்று குடும்பங்களும் குழுமங்கள் மற்றும் நிறுமங்கள் அமைத்து கூட்டு வணிகம் தொடர்ந்தனர். அவை கூட்டாண்மை அல்லது தனியார் நிறுமம் மூலம் கூட்டுக் குடும்பத்தினால் நடத்தப்படுகின்றன. அது குடும்பத்தின் உறுப்பினர்களே அவர்கள் பங்குதாரர்களும் மற்றும் இயக்குநர்களுமாவர். மூன்று குடும்பத்தினர்களின் பெயர்களில் பல்வேறு அசையாச் சொத்துகள் வாங்கப்பட்டன. மூன்று குடும்பத்தினரும் கூட்டுக் குடும்பத்தினர் மற்றும் அவர்கள் அனைத்து மூன்று குடும்பத்தினரின் பெயர்களிலும் சொத்துகளை வாங்குகின்றனர் என்னும் எண்ணத்தைத் தெளிவாகத் தெரிவிக்கிறது. 1967-ஆம் ஆண்டில் ரங்கசாமியின் மரணத்திற்குப் பின்னர், குடும்பத்தின் மூத்த உறுப்பினரும் 1-ஆம் மறுப்பாளருமான எஸ்.கே. குமாரசாமி, குடும்ப அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டார். இரங்கசாமியின் மகன்களான வழக்காளரும் மற்றும் 10-ஆம் மறுப்பாளரும் அவர்களுடைய தந்தையாரின் மரணத்தின்பொழுது மிகவும் இளவர்கள்; அதன்பின்னர், அவர்கள் 1-ஆம் மறுப்பாளரான எஸ்.கே. குமாரசாமியின் வழிகாட்டலிலும் மற்றும் கட்டுப்பாட்டிலும் இருந்தனர் என்பதையும், 1-ஆம் மறுப்பாளரின் வழிக்காட்டலின் அடிப்படையிலேயே அனைத்து வணிகங்களும் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் கோப்பிலுள்ள ஆவணங்கள் தெரிவிக்கின்றன. சொத்துகளின் பாகப்பிரிவினைக்காகத் தாக்கல் செய்யப்பட்ட மு.வ. எண் 37/1984-ங்கூட 1-ஆம் மறுப்பாளரின் தூண்டுதலிலேயே தாக்கல் செய்யப்பட்டது. அவ்வாதமானது, அவ்வழக்கின்

வழக்காளர் மு.வ. எண் 1101/1987-இல் தாக்கல் செய்த பதிலுரையைத் தாக்கல் செய்யும்பொழுது வைக்கப்பட்டுள்ளது. மு.வ. எண் 37/1984-இன் வழக்காளரான செந்தில் குமரவேல் மு.வ. எண் 1101/1987-இல் தன்னுடைய பதிலுரையில் தான் மு.வ. எண் 37/1984-ஐ, 1-ஆம் மறுப்பாளரின் தூண்டுதலிலேயே தாக்கல் செய்ததாகக் கூறினார். அப்பொருண்மையானது, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் பத்தி 9-இலுங்கூட குறிப்பிடப்பட்டுள்ளது.

87. மு.வ. எண் 1101/1987-இல் 1-ஆம் மறுப்பாளர்தான் பதிலுரை தாக்கல்செய்து, சாட்சியமளித்தார் என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். 4-ஆம் மறுப்பாளரான எஸ்.கே. சின்னசாமி, பதிலுரையும் தாக்கல் செய்யவில்லை, சாட்சியமும் அளிக்கவில்லை. 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினைக்குப் பின்னர் கூட்டுக் குடும்பம் முடிவிற்கு வந்துவிட்டது என வாதிடுவது, 1-ஆம் மறுப்பாளர்தான். 1-ஆம் மறுப்பாளர் தன்னுடைய பதிலுரையிலும் மற்றும் நீதிமன்றத்தின் முன்பாக வாய்மொழி சாட்சியத்திலும் வைக்கும் வழக்கு யாதெனில், 8.3.1981 அன்று பாகப்பிரிவினை நிகழ்ந்து, அதே ஆண்டில் மூன்று குடும்பங்களுக்குமிடையில் உடன்படிக்கை ஏற்பட்டு, 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையானது, 1981-ஆம் ஆண்டைய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பிறப்பிக்கப்பட்டது என்பதாகும். 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில், பத்திகள் 16 மற்றும் 17 ஆகியவற்றில் 1-ஆம் மறுப்பாளரால் பின்வருவன வாதிடப்பட்டன:-

"16. ....கூட்டுரிமையை முடிவிற்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடானது 1981-ஆம் ஆண்டிலேயே செய்யப்பட்டு, தனியுரிமையானது

ஒப்புக்கொள்ளப்பட்டது. எனவே, வழக்குரையில் கூறப்படுவது போன்று, பிரதிநிதித்துவமோ அல்லது உறுதிமொழியோ இருக்கமுடியாது.

17. ....பல்வேறுபட்டவற்றின் பிரிவினைகள் மற்றும் ஒதுக்கீடுகள் முன்பே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்ததால், 4-ஆம் மறுப்பாளருக்குத் தொகைகள் செலுத்தப்பட்டு, முன்தேதியிலேயே சுமூகமான முறையில் சமரசம் ஏற்படுத்தப்பட்டு, அதன் வாசகங்களுக்கிணங்க, தீர்ப்பாணையானது பிறப்பிக்கப்பட்டது. தீர்ப்பாணையுங்கூட பதியப்பட்டுவிட்டது. உடன்படிக்கையின் வாசகங்கள் சமரசத்தில் சேர்க்கப்பட்டமையால், சமரசத்தில் 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையை ஏற்படுத்தவேண்டியதில்லை என தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டனர்."

88. 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையின் மூலம் இரங்கசாமி குடும்பத்தினர் உட்பட அனைத்துக் குடும்பத்தினரின் பெயரிலும் இருந்த சொத்துகள் அனைத்தின் பாகப்பிரிவினையும் 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினைக்குப் பின்னர் கூட்டுக் குடும்பம் இல்லை என மறுப்பதும், குடும்பத்தின் மூத்த உறுப்பினரான 1-ஆம் மறுப்பாளரின் வழக்காகும். 4-ஆம் மறுப்பாளரான எஸ்.கே. சின்னசாமி ம.சா.2-ஆக சாட்சியமளித்தார். 10.4.1997 அன்றைய அவருடைய குறுக்கு விசாரணையில் ம.சா.2 கூறியதாவது:-

"1981-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாங்கள் பொதுச் சொத்துகளைப் பிரித்துக்கொண்டோம். 8.3.1981 அன்று அதனை எழுத்துவடிவ உடன்படிக்கையாக்கி, முத்திரைத் தாளில் எழுதி, கையெழுத்திட்டோம். அதில், நானும், 4, 7 மற்றும் 10-ஆம் மறுப்பாளர்களும் மற்றும் வழக்காளரும் கையெழுத்திட்டோம். மூன்று படிவங்கள் எடுக்கப்பட்டன. ஆனால், அது தாக்கல் செய்யப்படவில்லை. அனைத்து மூன்று படிவங்களிலும் நாங்கள் அனைவரும் கையெழுத்திட்டுள்ளோம். நாங்கள் சொத்துகளிலுள்ள அவரவர் பங்கை எடுத்துக்கொண்டோம். 8.3.1981-ஆம் தேதிக்குப் பின்னர் சொத்துகள் அனைவரின் கூட்டு அனுபவத்திலோ அல்லது பொதுப் பயன்பாட்டிலோ இல்லை...."

89. மேலும் 11.8.1997 அன்றைய குறுக்கு விசாரணையில் ம.சா.2 கூறியதாவது:-

"....1981-இல் அனைத்து சொத்துகளின் பாகப்பிரிவினையானது நிகழ்த்தப்பட்டதென நான் கூறியுள்ளேன். 1981-ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட ஏற்பாடானது, 1984-ஆம் ஆண்டில் தீர்ப்பாணையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. புதிதாக ஏதும் செய்யப்படவில்லை. 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி 16 ஏக்கர் நிலமும், கட்டிடமும் கொண்ட வாசுதேவா மில்லும் மற்றும் அதன் எந்திரங்களும் என்னுடைய மூத்த அண்ணனின் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்டது...."

விசாரணை நீதிமன்றமானது, 30.9.1997-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையின் பத்தி 28-இல் தீர்ப்பளித்ததாவது:-

"28. .....8.3.1981 அன்று நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கையானது உண்மையானது, அது நடைமுறைக்கு வந்துள்ளது. ஏறத்தாழ புதிதாக உருவாக்கப்பட்ட பங்குகள் வழக்காளரின் குடும்பத்திற்கு தரப்பட்டன. 1981-ஆம் ஆண்டிற்குப் பின்னர், 1-ஆம் மறுப்பாளரின் குடும்பமானது தாமாகவே ஸ்வாமி & கோ (ரங்கசாமி சகோதரர்கள்) அதாவது ஸ்வாமி டெக்ஸ்டைல்ஸ் மற்றும் ரங்கவிலாஸ் வார்பிங் மற்றும் சைசிங் தொழிற்சாலை ஆகிய நிறுவனத்திலிருந்து விலகியுள்ளது. அது, வாய்மொழி மற்றும் ஆவணச்சான்றின் மூலம் அதாவது வ.சா.ஆ.12-இன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. வழக்காளரும் மற்றும் 10-ஆம் மறுப்பாளரும் மில்லை நிருவகித்தனர் என்பது தெளிவாக நிரூபிக்கப்படுகிறது. 8.3.1981-ஆம் ஆண்டிற்குப் பின்னர் 1-ஆம் மறுப்பாளர் எஸ்டேட்டில் உரிமை பெற்றுள்ளார் என்பது ம.சா.ஆ.67-இன் மூலம் தெளிவாக நிரூபிக்கப்படுகிறது. அது சிபீல்ட் தேயிலை தொழிற்சாலை ஆகும். மார்ச் 1981 வரையில் 10-ஆம் மறுப்பாளர் பதிவேட்டில் கையெழுத்திட்டிருந்தார். அதன்பின்னர், 1-ஆம் மறுப்பாளர் கையெழுத்திட்டிருந்தது ம.சா.ஆ.68 மற்றும் 69 ஆகியவற்றிலிருந்து தெளிவாகிறது. நுழைவு அட்டையிலும் அது தெளிவாகிறது. 1981-ஆம் ஆண்டிற்குப் பின்னர்

உடன்படிக்கையானது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது வெளிப்படுத்தப்படுகிறது. வழக்காளர் தரப்பில் தெரியப்படுத்தப் பட்டது யாதெனில், குன்னூர், வீரகேரளத்திலுள்ள சொத்தானது 1-ஆம் மறுப்பாளரின் பொறுப்பில் உள்ளது மற்றும் சோமனூரிலுள்ள சொத்துகள் 4-ஆம் மறுப்பாளரிடம் உள்ளது என்பது சரியல்ல. குன்னூரிலுள்ள சொத்துகளை நான் நிர்வகிக்கவில்லையென வழக்காளர் ஒப்புக்கொண்டுள்ளார். அது மேற்கூறப்பட்ட உடன்படிக்கையானது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை வெளிப்படுத்துகிறது."

90. மேலும், விசாரணை நீதிமன்றமானது பத்தி 159-இல் மீண்டும் தீர்ப்பளித்ததாவது, "1981-ஆம் ஆண்டைய உடன்படிக்கையானது உண்மையானது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் ம.சா.1-இன் வாதமானது ஏற்கத்தக்கது.

91. 08.03.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையானது வழக்காளரால் மறுக்கப்பட்டது. வழக்காளரின் வழக்கு யாதெனில், எக்காலத்திலும் மூன்று குடும்பங்களின் பெயர்களிலிருந்த சொத்துகளைப் பிரித்துக்கொள்ள 1981-ஆம் ஆண்டில் தரப்பினர்களால் உடன்படிக்கையேதும் எட்டப்படவில்லை. 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையானது 1-அம் மறுப்பாளரால் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. உடன்படிக்கையானது 1-ஆம் மறுப்பாளரால் தாக்கல் செய்யப்படவோ அல்லது குறியிடப்படவோ இல்லை.

92. மு.வ. எண் 37/1984-இல் 1-ஆம் மறுப்பாளரால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையைக் குறித்து ஏதும் கூறப்படவில்லை. மு.வ. எண் 1101/1987 வழக்கில் 1-ஆம் மறுப்பாளரால் தாக்கல்

செய்யப்பட்ட பதிலுரையில்தான், முதன்முதலாக 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையைக் குறித்து, 1-ஆம் மறுப்பாளரால் கூறப்படுகிறது. 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையானது தாக்கல் செய்யப்படவோ அல்லது குறியிடப்படவோ இல்லை அல்லது 1981-ஆம் ஆண்டில் மூன்று குடும்பங்களுக்கிடையே சொத்துகள் பிரிக்கப்பட்டது தொடர்பாக வேறு சான்றேதும் இல்லை.

93. 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையானது வேறொன்றுமல்ல. அது 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தியதாகும் என்பது 1-ஆம் மறுப்பாளரின் வழக்காகும். இவ்வாறாக, மூன்று குடும்பங்களின் பெயரில் இருந்த அனைத்து சொத்துகளும் பிரிக்கப்பட்டு, 8.3.1981 அன்று வெவ்வேறு குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்டன. பின்னர் அது 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட தொடர்புடைய தீர்ப்பாணையின் மூலம் செயல்படுத்தப்பட்டது என்பது 1-ஆம் மறுப்பாளரின் தெளிவான வழக்காகும். மறுப்பாளரின் வழக்கின்படி, வாசுதேவா டெக்ஸ்டைல்ஸ் மில்லானது ரங்கசாமி குடும்பத்தினருக்கு அளிக்கப்பட்டது. குன்னூரிலுள்ள சொத்தானது 1-ஆம் மறுப்பாளரால் எடுத்துக்கொள்ளப்பட்டது மற்றும் சோமனூரில் உள்ள சொத்துகள் 4-ஆம் மறுப்பாளரால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

94. மூன்று குடும்பங்களின் பெயரில் இருந்த அசையாச் சொத்துகள் அனைத்தும் 8.3.1981 அன்று பிரிவினை செய்யப்பட்டது. அது, 6.8.1984 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டது என்னும் வழக்குடன் 1-ஆம் மறுப்பாளர் வரும்பொழுது முடிவு மறுக்கமுடியாதது. அது குடும்பம், கூட்டுகுடும்பம், மூன்று குடும்பங்களும் இந்து கூட்டுக் குடும்பத்தின் அங்கங்கள் அல்ல. 1-ஆம் மறுப்பாளரால் கோரப்படுவதுபோன்று, 8.3.1981 அன்று யாதொரு பாகப்பிரிவினைக்கும் முயற்சிப்பதற்கான சூழ்நிலை ஏதுமில்லை. பொருண்மை யாதெனில், 8.3.1981 அன்று மூன்று குடும்பங்களுக்கிடையில்

பாகப்பிரிவினை நிகழ்ந்தது என்னும் வழக்குடன் 1-ஆம் மறுப்பாளர் வருகின்றார். அதுவே, அன்றைய நாள்வரையில் மூன்று குடும்பங்களும் கூட்டுக் குடும்பங்கள் என்பதை 1-ஆம் மறுப்பாளரின் வழக்கே நிரூபிக்கிறது.

95. 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையையோ அல்லது 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையையோ வழக்காளர் ஒருபொழுதும் ஒப்புக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட தொடர்புடைய தீர்ப்பாணையானது பிறப்பிக்கப்படும் வரையில் தரப்பினர்கள் கூட்டுக் குடும்பத்தினராகவும் மற்றும் மூன்று குடும்பத்தினர் பெயரில் இருந்து சொத்துகள் கூட்டுக் குடும்பச் சொத்துகளாகவும் இருந்தன என்பது தெளிவாகிறது.

96. 1979-ஆம் ஆண்டில் தடாபத்தில் உள்ள குடியிருப்புச் சொத்தானது 1-ஆம் மறுப்பாளரின் பெயரில் வாங்கப்பட்டபொழுது, அனைத்து மூன்று குடும்பங்களும் இந்து கூட்டுக் குடும்பத்தினர் என்பதும் மற்றும் குடியிருப்புச் சொத்தானது கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களுள் ஒருவர் பெயரில் வாங்கப்பட்டது அனைவரின் நலனிற்காகவும் என்பதும் தெளிவாகிறது.

97. இரு கீழமை நீதிமன்றங்களும் 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையை ஏற்றுக்கொண்டபொழுதிலும் அத்தகைய வாதத்தின் விளைவை பரிசீலிக்கத் தவறிவிட்டன. 8.3.1981 அன்று அனைத்து அசையா மற்றும் அசையும் சொத்துகள் பாகப்பிரிவினை செய்யப்பட்டதாகக் கூறப்படும்பொழுது, அன்றைய தேதிவரையில், குடும்பமானது இந்து கூட்டுக் குடும்பம் என்னும் முடிவு மறுக்கமுடியாதது ஆகும். 7.11.1960-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினைக்குப் பின்னர், அனைத்து மூன்று குடும்பங்களும் தனித்தனி குடும்பங்களாயின என 1-ஆம் மறுப்பாளரால் புனையப்பட்ட

கூற்றானது, 8.3.1981-ஆம் தேதியிடப்பட்ட பாகப்பிரிவினையின் கோரிக்கையின் மூலம் மறுக்கப்படுகிறது/பொய்யாக்கப்படுகிறது.

98. மூன்று குடும்பங்களும் 1967-ஆம் ஆண்டிற்குப் பின்னர் தனித்தனியே வருமான வரி அறிக்கை மற்றும் செல்வ வரி அறிக்கைத் தாக்கல் செய்யும் பொருண்மைக்கு இரு, அதாவது விசாரணை நீதிமன்றமும் மற்றும் உயர் நீதிமன்றமும் அதிக முதன்மைத்துவம் அளித்துள்ளன. இந்து கூட்டுக் குடும்பத்தின் தனி உறுப்பினருங்கூட தனிப்பட்ட வருமான வரி மற்றும் செல்வ வரி ஆகியவற்றை உரிய சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யமுடியும். அவ்வாறு தனிப்பட்ட முறையில் வருமான வரி தாக்கல் செய்வதோ அல்லது செல்வ வரி தாக்கல் செய்வதோ, குடும்ப நிலைக்கு முடிவான நிரூபணமாகாது. குடும்பமானது 7.11.1960-ஆம் தேதிக்குப் பின்னரும் குடும்பமானது கூட்டுக் குடும்பமாகவே தொடர்ந்தது என்பதே வழக்கு முழுவதிலும் வழக்காளரின் வழக்காகும். 1-ஆம் மறுப்பாளர் மட்டுமே 8.3.1981 அன்று பாகப்பிரிவினை நிகழ்ந்தது. அது, 6.8.1984-ஆம் தேதியிடப்பட்ட சமரச தீர்ப்பாணையின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்னும் வழக்குடன் பதிலுரை தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார். 8.3.1981 வரையிலோ அல்லது 6.8.1984 வரையிலோ கூட்டுக் குடும்பம் இருந்ததென நிரூபிக்கப்படுகிறது. இவ்வாறாக, 1979-ஆம் ஆண்டில் தடாபத் குடியிருப்பு சொத்தானது வாங்கப்பட்டபொழுது மூன்று குடும்பங்களும் சேர்ந்திருந்தனர்.

99. தடாபத் குடியிருப்புச் சொத்தானது அனைத்து மூன்று குடும்பங்களின் ஆதாயத்திற்கானதாகும், அது மேலும், அந்த மறுபயன் தொகையானது 1-ஆம் மறுப்பாளரால் அவருடைய தனிப்பட்ட கணக்கிலிருந்தோ அல்லது பணமாகவோ செலுத்தப்படவில்லை என்பதிலிருந்து நிரூபிக்கப்படுகிறது. அத்தொகையானது, அனைத்து மூன்று குடும்பங்களும் பங்குதாரர்களாகவும் மற்றும் இயக்குநர்களாகவும்

உள்ள ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்ற நிறுவனத்தின் கணக்கிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் நிறுமமானது அந்நிறுமத்திற்காக தடாபத்தில் உள்ள குடியிருப்பு சொத்தை வாங்கவில்லை. ஸ்வாமி & ஸ்வாமி ப்ளாண்டேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது தடாபத்தில் உள்ள குடியிருப்பு சொத்தின் உரிமையாளர் அல்ல மற்றும் அச்சொத்தானது, அனைத்து மூன்று குடும்பங்களின் ஆதாயத்திற்கான கூட்டுக் குடும்பச் சொத்தாகும்.

100. இவ்வாறாக தடாபத்தில் உள்ள குடியிருப்பு சொத்தானது அதாவது மு.வ. எண் *1101/1987* வழக்கின் 'ஆ' அட்டவணையின் 'x' சொத்தானதில், அனைத்து மூன்று குடும்பங்களுக்கும் சம பங்குண்டு என நாங்கள் முடிவு செய்கின்றோம். இக்குடியிருப்புச் சொத்தானது மு.வ. எண் *37/1984* வழக்கின் அட்டவணையில் இல்லையாதலால் வழக்காளர் மு.வ. எண் *1101/1987* வழக்கின் மூலம் பாகப்பிரிவினைக் கோருவதில் தடையேதுமில்லை. அதற்கிணங்க 'ஆ' அட்டவணையின் 'x' சொத்தில் வழக்காளர்/ *7*-ஆம் மறுப்பாளர், *1*-ஆம் மறுப்பாளர் மற்றும் *4*-ஆம் மறுப்பாளர் ஆகியோர், $^{1}/_{3}$ சம பங்கிற்கு கூட்டாக உரிமையுடையவர்கள். அதாவது (கே. ரங்கசாமி குடும்பம் $^{1}/_{3}$, எஸ்.கே. குமாரசாமி குடும்பம் $^{1}/_{3}$ மற்றும் எஸ்.கே. சின்னசாமி குடும்பம் $^{1}/_{3}$ சம பங்கிற்கு உரிமையுடையவர்கள்) என நாங்கள் அறிவிக்கின்றோம். அதற்கிணங்க மேற்படி சொத்திற்கான பாகப்பிரிவினை முதல்நிலை தீர்ப்பாணையானது வரையப்பட வேண்டும்.

101. உரிமையியல் மேல்முறையீட்டு எண் *1537/2016* மற்றும் உரிமையியல் மேல்முறையீட்டு எண் *1538/2016* ஆகியவை பகுதியாக அனுமதிக்கப்படுகின்றன.

அதன்விளைவாக மு.வ. எண் 1101/1987-ஆனது மேற்கூறப்பட்ட அளவிற்கு, 'ஆ' அட்டவணையின் 'x'-ஆம் இனச் சொத்திற்கு அதாவது "கோயமுத்தூர் பதிவு அலுவலகம், கோயமுத்தூர் மாநகராட்சி, தடாபத், டாக்டர் அழகப்பா செட்டியார் சாலை, 0.33 ஏக்கர் (4500 சதுர அடி) கட்டப்பட்ட பகுதிக்கு பாகப்பிரிவினை அளித்து தீர்ப்பாணை வழங்கப்படுகிறது".

102. தரப்பினர்கள் இறுதி தீர்ப்பாணைக்காக விசாரணை நீதிமன்றத்தின் முன்பு விண்ணப்பம் தாக்கல் செய்ய சுதந்திரமுடையவர்கள் மற்றும் அத்தகைய விண்ணப்பமானது விசாரணை நீதிமன்றத்தினால் சட்டத்திற்குட்பட்டு முடிக்கப்படவேண்டும்.

103. தரப்பினர்கள் அவரவர் செலவை அவரவரே ஏற்கவேண்டும்.

மாண்புமிகு நீதியரசர் திரு. அசோக் பூஷன்
மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி

புது தில்லி,
30.06.2021.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."